பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 19 புதன்கிழமை 03.05.2023 கதிர் 174

# 13ஐ முழுதாக அமுல்படுத்த கட்சிகள் கூடி வலியுறுத்தும்

## இன்று யாழ்ப்பாணத்தில் தீர்மானம் எடுக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 03

(எஸ்.நிதர்ஷன்)

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் அவசரமாகச் சந்தித்துப் பேச உள்ளன. 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி இந்தக் கட்சிகள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் என்று தெரிகிறது.

13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து இலங்கை ஆட்சியாளர்களும் பேசி வருகின்ற நிலையில் அதனை முழுமையாக அமுல்ப்படுத்துமாறு இந்தியாவும் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

இந்த நிலையில் அதனை அமுல்ப்படுத்துவது தொடர்பில் தமிழ்க் கட்சிகளிடையே ஒரு மித்த நிலைப்பாடு இல்லை என்பதாக அரச தரப்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. ஒற்றையாட்சியின் கீழான 13 ஆவது திருத்தததை முழுமையாக நிராகரிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்ச்சியாகக் கூறிவருகின்றது.

☞ 2

# இது ரகசியம் அல்ல!

நாடு முழுவதும் ஒரு நடைமுறை என்றால் வடக்கு மாகாணத்தில் மட்டும் மற்றொரு நடைமுறை என்று இரண்டு நாள்களுக்கு முன்னர் ஒரு விடயத்தைப் பற்றி இந்தப் பத்தியில் உங்களுக்குச் சொல்லியிருந்தேன். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்த அரச பணியாளர்களை மீண்டும் கடமையைப் பொறுப்பேற்கும்படி வடக்கு மாகாண சபை கடிதம் அனுப்பியிருக்கின்றது என்பதை அதில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

இப்படி வேட்பாளர்களான அரச பணியாளர்களுக்கு இப்போது அடிப்படைச் சம்பளம் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் அவர்களை வேலைக்குத் திருப்பி அழைப்பது தொடர்பில்

☞ 2

# அனுபவப் பகிர்வு இணையவழி செயலமர்வு

ஆஸ்திரேலிய தேசிய செயற்திறன் ஆணைக்குழு மற்றும் இலங்கை தேசிய செயற்திறன் ஆணைக்குழு ஆகியவற்றின் செயற்பாட்டாளர்களுக்கு இடையிலான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான இணையவழி அமர்வொன்று இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தினால் இந்தக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக இலங்கை பரந்த அளவிலான திட்டமிடல்களை அமுல்படுத்தியிருக்கின்ற நிலையில் அதன் முதன்மைத் திட்டமாக தேசிய செயற்திறன் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டுமென அடையாளங்காணப்பட்டுள்ளது.

அதன் காரணமாகவே நாட்டின் நெருக்கடியை பொருட்படுத்தாமல் 2023 வரவு செலவு திட்டத்தில் ஆணைக்குழுவை

☞ 2

# லஞ்சம் பெற்றவர் யார்? மத்திய வங்கி உடன் வெளிப்படுத்தவேண்டும்

## பேரா. பீரிஸ் வலியுறுத்து



எக்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான இழப்பீட்டைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை தாமதப்படுத்துவதற்காக இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளார் என்று சந்தேகிக்கப்படும் சாமர குணசேகர என்ற

☞ 2

# அமெரிக்கத் தடைக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

## அட்மிரல் வசந்த கரன்னகொட அறிவிப்பு

என் மீதான குற்றச்சட்டுக்கள் அறிவிக்கப்படாது தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே சட்ட நடவடிக்கையை விரைவில் எடுக்கவுள்ளேன் என்று சுட்டிக்காட்டி இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கு முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ் த பிளீட் வசந்த கரன்னகொட கடிதம் அனுப்பியுள்ளார்.

வசந்த கரன்னகொட கடற்படைத் தளபதியாக இருந்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்காவிற்குள் நுழையத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கதிணைக்களம் அறிவித்திருந்தது.

இது தொடர்பிலேயே வசந்தகரன்னகொட அமெரிக்க தூதுவருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 27ஆம் திகதி வடமேற்கு மாகாண ஆளுநரும், கடற்படையின் முன்னாள் தளபதியுமான எனக்கும், மற்றும் எனது மனைவி அசோகா கரன்னகொடவுக்கும் அமெரிக்காவிற்குள் நுழைய தடை விதிக்கப்படுவதாக இராஜாங்கச் செயலாளர் அறிவித்தார்.

உரிய நடவடிக்கையின் மூலம் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக சட்டரீதியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள

☞ 2

# முரண்பாடுகளை பேசித் தீர்க்கலாம்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கருத்து முரண்பாடுகளைப் பேசித் தீர்ப்பதற்குத் தயாராகவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற வடிவேல் சுரேஷ் தலைமையிலான மேதினக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பதுளையில் ஐக்கிய மக்கள்

☞ 2

# கொழும்பு துப்பாக்கிச் சூடு தொடர்பில் தீவிர விசாரணை

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்புத் துறைமுகத்துக்கருகில் துப்பாக்கிச் சூடு நடத்தி 9 பேரைக் காயப்படுத்தியவரைக் கைது செய்யவில்லைஎன்றபோதும் விசாரணைகள் தொடர்வதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நான்கு பெண்கள் உட்பட 9 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களுக்கான சிகிச்சை தொடர்ந்து இடம்பெறுகின்றது.

இந்நிலையில் நேற்றையதினம் பொலிஸ் தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் குறித்த சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிர்மாணிக்கப்பட்டுவரும் துறைமுக நுழைவு வீதியிலுள்ள

☞ 2

# மின்சார திருத்தச் சட்டத்தால் பெரும் பிரச்சினை ஏற்படும்

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் எச்சரிக்கை

உத்தேச மின்சாரத் திருத்தச்சட்டத்தால் பெரும் பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க எச்சரித்துள்ளார்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவில் செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உத்தேச மின்சாரத் திருத்தச் சட்டம் 2023 மிகவும் இரகசியமானதொரு ஆவணமாக வைக்கப்பட்டுள்ளது. இதனை இன்னமும் வெளியிடவில்லை. ஊடகங்களுக்கும் இதுபற்றித் தெரிவிக்கப்படவில்லை.

இந்தச்சட்டத்தினை அமுல்படுத்துவதன் ஊடாக, 1967ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம், 2009ஆம் ஆண்டு மின்சாரத் திருத்தச்சட்டம் ஆகியவற்றை இரத்துச் செய்துவிட முயற்சிக்கின்றார்கள்.

அத்துடன் இலங்கை மின்சார

☞ 2

# பணவீக்கம் திடீரென குறைந்தமைக்கான காரணத்தை விளக்கும் தேசிய மக்கள் சக்தி

பணவீக்கம் திடீரெனக் குறைந்தமைக்குக்காரணம், பொது மக்கள் மீது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் அழுத்தமாக உட்செலுத்தப்படுவதாலாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி.ஹரனி அமரசூரிய தெரிவித்தார்.

அகிலஇலங்கைசமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் 26ஆவது வருடாந்த நிகழ்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது பணவீக்கம் திடீரென குறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புள்ளி விவரங்களின் பிரகாரம் அது சரியாகவும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

☞ 2

# 13 தமிழர்களுக்கான தீர்வல்ல சுயநிர்ணய உரிமை தேவையே

## விக்னேஸ்வரன் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

13 ஆவது திருத்தத்தை வைத்து தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்கலாம் என ஜனாதிபதி கருதினாரானால் அது தவறு என்பதுடன் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.வீ. விக்கினேஸ்வரன் வடகிழக்கு மாகாணங்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனது கட்சி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

☞ 2



# உலக வங்கி அனுசரணையில் முன்பள்ளிகளுக்கு சத்துணவு

## வடக்கில் நேற்று தொடங்கியது திட்டம்

உலக வங்கியின் அனுசரணையில் வடக்கிலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சத்துணவு வழங்கும் செயற்திட்டம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் தொடக்கி வைக்கப்பட்டது.

வடமாகாணத்தில் உள்ள 1600 முன்பள்ளிகளில் மூன்று மாத காலத்திற்கு இச் சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

திட்டத்தின் தொடக்க நிகழ்வு கொக்குவிலில் உள்ள முன்பள்ளி ஒன்றில் இடம் பெற்றது.

முன்பள்ளி மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தை பேணும் நோக்குடன் அவர்களுக்குச் சத்தான உணவை வழங்குவதே இந்தத்

☞ 2

# விகாரையை சுற்றியுள்ள காணிகளை விடுவிக்கக் கோரி இன்று போராட்டம்

## தையிட்டியில் பிற்பகல் முன்னெடுப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வலிகாமம் வடக்கு தையிட்டியில் சட்டவிரோதமாககட்டப்பட்ட விகாரையைச் சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி இன்று கவனவீர்ப்பு போராட்டமொன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ், வலிவடக்கு தையிட்டி பிரதேசத்தில் இதுவரை காலமும் விடுவிக்கப்படாமல் உள்ள பொதுமக்களின் காணிக்குள் அமைக்கப்பட்டு வருகின்ற பௌத்த விகாரைக்கு மேலதிகமாக அதனை சுற்றியுள்ள பொதுமக்களின் காணிகளும் கையகப்படுத்தப்பட்டு உள்ளது.

இதனை எதிர்க்கும் முகமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாக பலரும் ஒன்றிணைந்து இந்தக் கண்டனப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய இன்று பிற்பகல் 3 மணிக்கு தையிட்டியில் இப்போராட்டம் நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (03)

# எங்கள் மீது பொய்ப் பழியை ஜனாதிபதி சுமத்த முடியாது

## ரணிலின் மே தின உரை குறித்து சுமந்திரன் காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் கட்சிகள் பின்னடிப்பதால்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்த முடியாமல் இருக்கிறது என்று ஜனாதிபதி கூறுவது நியாயமற்ற கூற்று எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இவ்வாறான பழிக் குற்றச்சாட்டுக்கள் வரக்கூடாதென்பதற்காகவே செயற்பட்ட எங்கள் மீது இப்போது பொய்யான ஒரு பழியை ஜனாதிபதி சுமத்த முடியாது, தான் அதனைச் செய்யாமல் தவறிழைத்துவிட்டு.

இவ்வாறு செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் கருத்துத் தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். ஜனாதிபதியின் மேதின உரை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் இந்த

☞ 2



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொழும்பு ஆட்சியாளர்கள் இன்னமும்ஒருமுழுமையான, தெளிவான முடிவுக்கு வரவில்லை. திகதி குறிப்பிடப்படாமல் உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்பட்டுள்ள நிலையில், வேட்பாளர்களான அரச பணியாளர்களை வேலைக்குத்திருப்பிஅழைப்பதுகுறித்து தேர்தல்கள்ஆணைக்குழுவும் இன்னமும் ஒரு முழுமையான, தெளிவான முடிவை எடுக்கவில்லை. அப்படிமுடிவு எடுக்க முடியாதளவிற்குச் சட்டச்சிக்கல்கள்நிறைய அதிலிருக்கின்றன.

இவையெதுபற்றியும்கவலைப்படாத வடக்கு மாகாண சபை வேட்பாளர்களான அரச பணியாளர்கள் அனைவரையும் உடனடியாகக் கடமையை மீளப் பொறுப்பெடுக்குமாறு அறிவித்து, அவர்களில் பலர் பணிக்குத் திரும்பியும்விட்டனர். ஆனால், வடக்கு மாகாண சபை அப்படி அரச பணியாளர்களை வேலைக்குத்திருப்பிஅழைத்திருந்தால் அது அரசமைப்புக்கு முரணானது என்று தெரிவித்திருக்கிறார் தேர்தல்கள்ஆணைக்குழுஉறுப்பினர் சமன் சிறி ரத்னாயக்க. வடக்கு மாகாண சபையின் இந்த நடவடிக்கை குறித்து தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான கபே சார்பில் கேட்கப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

வேட்புமனுவை தாக்கல் செய்த அரச உத்தியோகத்தரான வேட்பாளர்கள் அரசமைப்புக்கு விரோதமாக பணிக்கு அழைக்கப்பட்டிருப்பின் அது தொடர்பில் திணைக்கள தலைவர்கள் சட்டத்துக்கு முன்னால் பொறுப்பு சொல்ல வேண்டி ஏற்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் சமன் சிறி ரத்னாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

வேட்பு மனு தாக்கல் செய்த அரசபணியாளர்களை மீண்டும்கடமைக்குஅழைப்பது தொடர்பில் எந்த அரச நிறுவனத்தாலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனை பெறப்படவில்லை. இது தொடர்பில் எந்தத் திணைக்களத்திற்கும் அனுமதியும் வழங்கப்படவில்லை. அவ்வாறு அழைப்பது சட்ட விரோதமானது. எந்த அரச நிறுவனமானது அவ்வாறு ஊழியர்களைக் கடமைக்கு அழைத்திருப்பின் அதனை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அப்படி வழக்குத் தாக்கல் செய்யப்படின் அந்த அரசமைப்புச் சட்ட சிக்கலை திணைக்களத் தலைவர்களே நீதிமன்றின் முன்னால் சந்திக்க வேண்டி ஏற்படும். அத்துடன்இத்தகைய அழைப்பை ஏற்று யாராவது கடமைக்குத் திரும்பாது விட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்க முடியாது - என்றும் ஆணையாளர் சமன் சிறி ரத்னாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

ஆக மொத்தத்தில் இப்போது திணைக்களத் தலைவர்களின் குடுமி இப்போது வேட்பாளர்களான அரசபணியாளர்களின் கைகளில் சிக்கிக் கொண்டுள்ளது. முன்னரைப் போன்று அவர்களை எடுத்தெறிந்தோ, மோசமாகவே நடத்த முற்பட்டால் எதிர்நடவடிக்கை, பதில் நடவடிக்கை, பழிவாங்கல் நடவடிக்கை சட்ட ரீதியாகப் பாயக்கூடிய அபாயத்தில் - ஆப்பின் மேலே - அமர்ந்திருக்கிறார்கள் திணைக்களத் தலைவர்கள். என்னதான் நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்!

- இடிமின்னல் -

## 13ஐ முழுதாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதற்கமைய தமிழர் பரப்பிலுள்ள பல்வேறு தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து 13 ஆவது திருத்தம்தொடர்பில்ஆராய்ந்து ஒருமித்துதீர்மானம்எடுக்கும்முகமாக இன்றுயாழ்ப்பாணத்தில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட உள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தக் கூட்டத்தில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தி விசேட தீர்மானமொன்று எடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (03)

## அனுபவப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிறுவுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட அமைச்சுக்கள், திணைக் களங்கள் மற்றும் அமைப் புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக அமைச்சுக்கள்உள்ளடங்கிய செயற்பாட்டு குழு ஒன்றின் ஊடாக இதன் செயற்பாடுகள் வழிநடத்தப்படும்.

செயற்திறன் செயற்பாடுகள் தொடர்பிலான சர்வதேச முறைமைகளை ஆராய்ந்து பார்ப்பதே ஆணைக்குழுவின் நோக்கமாவதோடு, அதற்காகச் சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெற்ற ஆஸ்திரேலிய செயற்திறன் ஆணைக்குழுவின்உதவியை இந்த ஆட்சி கோரியுள்ளது. அதற்கானஉதவிகளைஇலங்கைக்கு வழங்குவதாக இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஆணையரகம் உறுதியளித்திருந்தது.

இந்தத் தொடக்கமானது இலங்கையின் பொருளாதார மீள் எழுச்சிக்கு ஆஸ்திரேலிய ஆட்சியாளர்கள் உதவ முன்வந்துள்ளதைக் காண்பிக்கும் அதேநேரம், அதனால் இலங்கை மற் றும் ஆஸ்திரேலியாவுக்குஇடையிலான இருதரப்பு உறவுகள் வலுப்பெறும்என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

## லஞ்சம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நபர் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு மத்திய வங்கிக்கு உள்ளதாக ஐக்கிய மக்கள் சபையின் அங்கத்தவரும், பாராளுமன்ற உறுப்பினருமானபேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் உள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையராகவும், இலங்கையருக்கு உரிய பெயரைக் கொண்டிருப்பவராகவும் இருப்பவர் சாமர குணசேகர. அவர் யார் என்பது தற்போது வரையில் வெளிப்படுத்தப்படவில்லை. அவரின்அடையாளத்தினைத் தேட வேண்டியுள்ளது.

உண்மையில் அவ்வாறான நபர் ஒருவர் உள்ளரா இல்லைகற்பனையில்ஒருவர் உருவாக்கப்பட்டுள்ளாரா என்பதை உறுதி செய்ய வேண்டியுள்ளது. இங்கிலாந்து வங்கியொன்று எழுந்தமான மாக 250 மில்லியன் டொலர்கள் பணத்தினை வைப்பிலிடுவதற்கு ஏற்றுக் கொள்ளாது.

எவ்வாறாயினும், இந்த விடயம் சம்பந்தமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மிகவும் பொருத்தமானவர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக உள்ள கலாநிதி நந்தலால் வீரசிங்கவே. மத்திய வங்கியில் நிதிவிசாரணைப்பிரிவொன்று உள்ளது. அதன் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

ஆகவே, மத்திய வங்கிய ஆளுநர் இந்த விடயத்தில் உரிய உண்மையைக் கண்டறிந்து பாராளுமன்றத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். லண்டன்வங்கியில்இவ்வாறு பெருந்தொகை பணத்தை வைப்பிலிடமுடியாதுஎன்றால் இவ்வாறான பொய்யை ஏன் பகிரங்கமாகக் கூறினார்கள் என்றகேள்விஎழும். அதற்கும் பதிலளிக்கவேண்டும்என்றார்.

## அமெரிக்கத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போதிலும், குற்றச்சாட்டுகள் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் எனக்கு அறிவிக்கவில்லை

எனக்கும்எனது குடும்பத்தினருக்கும் அமெரிக்காவிற்குள்பிரவேசிக்க விதிக்கப்பட்ட தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக நானோ எனது குடும்பத்தினரோ அமெரிக்காவுக்கான விசாவிண்ணப்பத்தைகோரவும் இல்லை. ஆகவேதிடீரெனஎம் மீது தடை அறிவிப்பு விடுக்கப்பட்டமயால் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன் - என்றார்.

## முரண்பாடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சக்தியினாலேயே மே தினக் கூட்டம்நடத்தப்பட்டது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி கோரப்பட்டது. அதற்கு அமையவே பதுளையில் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அந் தக் கூட்டத்தில் எமது கட்சியின் உறுப்பினர்களான காவிந்து, சமிந்த விஜயசிறி உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர். இருப்பினும் அங்கு வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் மாறுபட்ட நிலைமையை வெளிப்படுத்துவதாக உள்ளதாகக் கூறப்படுகின்றது. உண்மை அதுவல்ல. சிலர் பிரபல்யம் அடைவதற்காக அவ்வாறான கருத்துக்களைக் கூறுவது வழமை. இது இயல்பான விடயமாகும்.

எவ்வாறாயினும் கட்சிக்கான ஒழுக்கமொன்று இருக்க வேண்டும். ஆகவே கருத்து முரண்பாடுகளால்ஏற்படுகின்ற பிரச்சினைகளை பேசித் தீர்ப்பதற்குதயாராகவேஉள்ளோம். விரைவில்அந்தவிடயங்களை கலந்துரையாடித் தீர்ப்போம் - என்றார்.

## கொழும்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) களஞ்சியசாலைக்குள் நுழைந்து, அங்கிருந்த இரும்புகளைத்திருடுவதற்காக சென்ற இருவரை அந்தக் களஞ்சியசாலைக்குப்பொறுப்பாக இருந்த பாதுகாப்பு ஊழியர்கள் இருவர் கைது செய்ய முயற்சித்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த இடத்திற்கு சென்ற சிலர், பாதுகாப்பு ஊழியர்கள் இருவருடனும் மோதலில் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு ஊழியர்கள் இருவரிடமும் இருந்த துப்பாக்கியையும் பறிப்பதற்கு சந்தேகநபர்கள் முயற்சித்துள்ளனர் இதனை யடுத்தே துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அது சம்பந்தமான விசாரணைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். இருப்பினும் துப்பாக்கிச் சூடு நடத்திய பாதுகாப்பு ஊழியர்களை இதுவரையில் நாம் கைது செய்யவில்லை. ஏனென்றால், நாட்டில் பொலிஸார், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சில தனி நபர்கள் துப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கான அனுமதிகளைக் கொண்டிருக்கின்றார்கள். அந்தவகையில்அவர்களுக்கு வழங்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அவர்கள் துப்பாக்கியைப் பயன்படுத்துவது சட்டத்துக்கு முரணானது அல்ல.

ஆகவே, குறித்தபாதுகாப்பு ஊழியர்கள் தமது உயிரைப் பாதுகாப்பதற்காகவும், திருட்டைத் தடுப்பதற்காகவுமே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். அத்துடன் அவர்கள் இலக்கு வைத்து எவரையும் சுடவில்லை. ஆகவே அவர்களை கைது செய்ய வேண்டிய அவசியமில்லை. எனினும் நாம் தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம் - என்றார்.

## மின்சார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சபையை14நிறுவனங்களாகப் பிரித்து 2017ஆம் ஆண்டுநிறுவனங்கள் சட்டங்களுக்கு அமைவாக சொத்துக்கள், பொறுப்புக்களை வழங்குவதற்குஎதிர்பார்க்கின்றார்கள்.

லக்சபானக் கட்டமைப்பு என்ற பெயரில் கெசல்கம ஓயா, மஸ்கெலிய ஓயா ஆகிய இரண்டு மின் உற்பத்தி நிறுவனங்களை ஒரு நிறுவனத்திற்குவழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், மகாவலி கங்கைக்கு அருகில் உள்ள பகுதிகளை பிறிதொரு நிறுவனத்திற்கு வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளனர். இதனைவிடவும், குகுல கங்கை, உமா ஓயா ஆகியவற்றை நிருவகிப்பதற்கு பிறிதொரு நிறுவனத்தினை உருவாக்கவுள்ளனர்.

மிக முக்கியமாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிறுவனத்தினைநிறுவனங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டுவந்தால் அதன் நிலைமையை மதிப்பிட முடியாத சூழலும் உருவாகும்.

இதனைவிடவும், மன்னாரில் அமைந்துள்ள 100 மெகாவோல்ட் மின் உற்பத்தி நிறுவனத்தை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கவுள்ளதோடு, களனிதிஸ்ஸ உள்ளிட்டவற்றை பிறிதொரு நிறுவனத்திற்கும் வழங்குவதற்குத்திட்டமிடப்பட்டுள்ளது.

இதனைவிடவும், மின் உற்பத்தி, விநியோகத்தைப் பராமரிப்பதற் காக ஒரு நிறுவனம் உருவாக்கப்படவுள்ளதோடு, ஊழியர்களின் சேமலாப நிதி உள்ளிட்டவற்றை கையாள்வதற்கு நிறுவனமொன்றும் உருவாக்கப்படவுள்ளது.

மேலும், பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு உட்பட்டு செயற்பட முடியாத வருத்தமொன்று அமைச்சர் காஞ்சன விஜயசேகரவிற்கு உள்ளது. ஆகவே அவர் என்னை நீக்குவதற்கு முயற்சித்தார். அதற்கு நாடாளுமன்றத்தில் 113வாக்குகள் தேவைப்படுகின்றன. ஆகவே அவ்விதமான பணியை விட்டுவிட்டு தற்போது பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவினை செயலற்றதாக்குவதற்கு முயற்சிக்கின்றார்.

அதற்காக, உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டத்தில், மின்சக்தி அமைச்சின் கீழ் செயற்படுவதற்காக மின்சார ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. அந்த ஆணைக்குழுவிற்கு அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படவுள்ளது. அதன் மூலம் அமைச்சர் காஞ் சன தனக்கு தேவையான விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சிக்கின்றார் - என்றார்.

## பணவீக்கம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆனால் அவ்வாறு திடீர் குறைவுக்கு காரணம் என்ன வென்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையால் பொதுமக்கள் உணவு நுகர்வைக் குறைத்துள்ளனர். எரிபொருட்களின் அளவு மட்டப்படுத்தப்பட்டுள்ளதால், பயணங்களைக் குறைத்துள்ளனர். மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால்அதனைப்பயன்படுத்தும் அளவு குறைந்துள்ளது.

இவ்வாறு அனைத்து வழிகளிலும் மட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றபோது, பொதுமக்கள் அதிலிருந்து வலிகிச் செல்லும் சூழலே உருவாகின்றது. இதனால்தான் பணவீக்கம் குறைவடைந்துள்ளது.

உள்நாட்டு உற்பத்திகள் அதிகரித்தோஅல்லதுஅந்நியச் செலாவணிவீதம்அதிகரித்தோ பணவீக்கம் குறைவடையவில்லை. சர்வதேச நாயண நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு பக்கத்தால் சதகமான நிலைமைகளை வெளிப்படுத்தினாலும், மறுபக்கத்தில் அந்த மக்கள் மீதே நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சுமை நாளுக்கு நாள் அதிகரிக்கப்பட்டுச் செல்கின்றது - என்றார்.

## 13 தமிழர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுடைய பிரச்சினையை வருட இறுதிக் குள் தீர்ப்பதாக ஜனாதி பதி கூறியதை நான் வரவேற்கின்றேன். ஆனால் 75 வருட பிரச்சினையை இந்த ஆறு ஏழு மாத காலத்திற்கு அவர் எப்படிதீர்க்க போகின்றார் என்பது தான் கேள்வியாக உள்ளது.

இந்தப் பிரச்சினைத் தீர்விற்கா அவர் எங்களுக்குத் தரும் சலுகைகளை நாங்கள் ஏற்கப்போவதில்லை. எங்களுக்குத்தேவையானஉரிமைகளை, உரித்துக்களை அவர் வழங்க வேண்டும் என்பது தான் எங்களது கோரிக்கையாகும்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் எங்களது பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதைச் சொல்லிக் கொள்கிறோம். ஆயினும்ஒருவேளை 13 ஆவது திருத்த சட்டத்தை அமல்படுத்துவதற்கு அவர் முன் வருவார் என்றால் அது தற்காலிக ஏற்பாட்டு நிலைமையே தவிர, அதை வைத்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளப் போகிறேன் என்று அவர் எண்ணினாராக இருந்தால் அது தவறாகும்.

தற்போது ஒற்றை ஆட்சியின்கீழ் ஏழு மகாணங்களில் பெரும்பான்மையாக சிங்களவர்கள் இருக்கையில் இரண்டு மாகாணங்களில் பெரும்பான்மையாகத் தமிழ் பேசும் மக்கள் இருக்கின்ற போது எங்களை அடிமைகளாக நடத்தி வருகிறார்கள்.

தமிழர்களின் உரிமைகளை அவர்களுக்கு கொடுக்காது பலவிதங்களிலும் அவர்களை மேலெழ விடாது நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள். ஒருமுன்னாள் முதலமைச்சர் என்ற வகையில் இதனை நான் தெளிவாகக் கூறமுடியும்.

எங்கள்மக்களுடையநல்வாழ்வுக்காக பலதிட்டங்களை நாங்கள் முன் வைத்தபோது அவற்றைநடைமுறைப்படுத்த முடியாமல் அதற்கு பல தடங்கல்களைஏற்படுத்திஎங்களை எல்லா விதத்திலும் கட்டியாள நினைத்தனர். அதனால் எங்களால் முன்னேற முடியாமல் போய்விட்டது.

ஆகவே அவர் கூறுவது போன்றுதமிழ்மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதாக இருந்தால் வடகிழக்கு மக்களுக்கு சுயநிர்ணய உரிமையைஅவர்வழங்கவேண்டும். அது ஒன்று தான் இந்த பிரச்சினையைதீர்க்கமுடியும்.

அதனை விடுத்து சில காலத்திற்கு முன்னர் அவர் குறிப்பிட்டது போன்று 13 ஆவது திருத்தத்தைத்தான் நான் நடைமுறைப்படுத்த போகின்றேன் என்று அவர் செய்யப்படுவாராக இருந்தால் அல்லது 13 ஆவது தான் தீர்வு என்று அவர் நினைப்பாராக இருந்தால் அது தீர்வாகாது என்பதை அவருக்கு ஆணித்தரமாக நான் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

இந்த 13ஐ நடைமுறைப்படுத்த வேண்டிய ஒரு அவசியம் தற்போது ஏற்பட்டு இருக்கிறது. ஏனென்றால் தற்போது ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டு இருக்கின்றார்.

அவ்வாறுபுதியஅரசமைப்பைக் கொண்டு வரும்போது இந்ததிருத்தச்சட்டம்இல்லாமல் ஆக்கப்படும். அதற்குப்பின்னர் அவர்களிடம் நாடாளுமன்றத்தில் அதித சிங்கள பிரதிநிதிகள் இருப்பதால் அவர்கள் எந்த நேரத்திலும் அந்த அரசமைப்பைத் தங்களுக்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பார்கள்.

ஆகவேதான் 13ஆவது திருத்தச் சட்டம் தற்போது இருக்கும் நிலையிலேயே அதனைநடைமுறைப்படுத்தச் சொல்லி நாங்கள் கோருகின்றோம். அதற்கும் மேலாக சுயநிர்ணய உரிமையை வழங்கும் ஓர் அரசியல் தீர்வை அவர்கள்வழங்கவேண்டும். அவ்வாறு செய்தால் பிரச்சினையை நிச்சயமாகத் தீர்க்க முடியும் என்பதை நான் கூறி வைக்க விரும்புகிறேன்

மேலும் ஆட்சியில் இணைந்து செயல்படுவது சம்பந்தமாக அவர் பேசுவது 13ஆவது திருத்தச் சட்டத் தில்தான் என நான் நினைக்கின்றேன். நம்புகின்றேன். 13ஆவது திருத்த சட்டத்தைதற்போதுநடைமுறைப் படுத்த வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. ஆனால் 13 தீர்வல்ல. அது தற்காலிகநிலைமை. ஆனால் நாங்கள்கேட்பதுஎங்களுடைய சுயநிர்ணய உரிமையைத் தான் அல்லது வட கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களுடைய (லைபரண்டம்) தீர்ப்பை பார்த்து நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது நிலையிலே 13வது திருத்த சட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க கோரினால் நாங்கள் கட்டாயமாக ஒத்துழைப்பு வழங்குவோம். ஆனால் அது எங்களுடைய தீர்வாக அமையாது என்பதைத்தான் நாங்கள் முக்கியமாகமீண்டும்மீண்டும்சொல்லி வைக்க விரும்புகிறோம் - என்றார். (03)

## உலக வங்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) திட்டத்தின் நோக்கம்.வடமாகாணத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட முன்பள்ளில் குறித்த திட்டம்செயற்படுத்தப்படுகிறது.

உலக வாங்கியின் நிதி அனுசரணையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் உள்ளூராட்சி அமைச்சு, வட மாகாண கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து குறித்த செயற் திட்டத்தினை வழி நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எங்கள் மீது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சனைக்குத் தீர்வைக் கானப் போகிறார் என்று அவர் ஜனாதிபதியான காலத்திலிருந்து சொல்லிவருகின்றநிலையில் சொல்வது மட்டும் போதாது. அதனைச் செயலில் காட்ட வேண்டுமென நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

இனப்பிரச்சனைக்கான தீர்வு குறித்து தங்களது கட்சியின்மேதினக்கூட்டத்தில் ஜனாதிபதிபேசியிருக்கின்றார். தான் ஜனாதிபதியான காலத்தில் இருந்து அவர் இதனைப் பற்றி பேசிக் கொண்டுதான் இருக்கிறார்.

கடந்த வருடம் நாடாளுமன்றில்நான்பேசுகின்றபோது குறுக்கிட்டுபேசிய ஜனாதிபதி, இனப்பிரச்சனைத் தீர்த்து வைப்போம்என்றும்அதுவும் இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்னதாகத் தீர்த்துவைக்க நீங்கள் உடன்படுகிறீர்களா எனவும் கேட்டிருந்தார்.

அதற்கு உடனேயே நானும் ஆம் என்று பதில் சொல்லியிருந்தேன்.

அதனைத் தொடர்ந்து மற்றைய கட்சித் தலைவர்களிடத்திலும் இதனை அவர் கேட்டபோது அவர்களும் ஆம் என்று சொல்லி இருந்தனர். குறிப்பாகமஹிந்தராஜபக்கூட 13க்கு அப்பாலே செல்வதாகக் கூறியிருந்தார்.

அதைத் தொடர்ந்து தான் சென்றவருடம்டிசெம்பர்மாதத்தில் ஜனாதிபதி அனைத் துக் கட்சிகளின் கூட்டம் ஒன்றை மீண்டும் கூட்டி இருந்த போது அதில் நாங்களும் பங்கேற்றிருந்தோம். அவ்வாறு பங்கேற்கும்போதுகூட இந்தப் பொறிமுறையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லாவிடிலும் எங்களிலே பழி போடாமல் இருப்பதற்காக நாங்கள் முழுமையான ஒத்துழைப்பை கொடுக்கிறோம்என்றுசொல்லி அதிலேநாங்களும்பங்கெடுத்திருந்தோம்.

அதிலே மட்டுமல்ல அதனைத் தொடர்ந்து தமிழர் தரப்பு கட்சிகளுடன் நேரடியாக பேசுவதற்காக ஜனாதிபதி அழைத்தபோது நான்கு கூட்டங்களுக்கு நாங்கள் சென்றிருந்தோம். அதைத் தொடர்ந்து திரும்பவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி பெப்ரவரி நான்காம்திகதிக்கு முன்னதாக இதனைத்தீர்ப்பதற்கான வழிவகைகளையும் அவர் சொல்லியிருந்தார். ஆனால்எதுவுமே நடக்கவில்லை. அன்று அவர் கூறியபெப்ரவரிநான்காம்தேதி வந்து போய்விட்டது. அதற்குப் பிறகு பெப்ரவரி 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் புதியஅமர்வுதொடங்கியபோது தன்னுடைய கொள்கை விளக்க உரையிலே அவர் திரும்பவும்அதேவிடயங்களைச் சொல்லியிருந்தார்.

அதாவது நாங்கள் பேச்சின்போது கொடுத்த பலமுன்மொழிவுகளைதான் அடையாளப்படுத்துவதாக அந்த உரையிலே அவர் சொல்லி இருக்கின்றார். அதன் பிறகு அவரை சந்தித்த பல தடவைகளில் நான் அதனை ஞாபகம்மூட்டிஇருக்கின்றேன்

நாங்கள்ஒத்துழைப்போம் என்று சொல்வது மட்டும் போதாது என்று, தீர்வைக் காண்பதற்கான எமது முழுமையான பங்களிப்பை கொடுத்துக் கொண்டே இருப்போம். ஆகையினால் எங்களுடைய பங்களிப்பிலே எந்த குறைவும்இருக்காதுஎன்பதை திட்டவட்டமாக அவருக்கு நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் நாங்கள் காண்பித்திருக்கிறோம்.

நேற்றைய தினம் அவர் உரையாற்றுகிற போது தமிழ் கட்சிகளும் இதிலே பின்னடித் திருப்பதாக அவர் சொல்லுவது நியாயமற்றஒருகூற்றுஆகும்.

ஜனாதிபதிஅழைத்திருந்த முதலாவது அனைத்துக் கட்சி மாநாட்டிலே தீர்வுக்கான அவரது முயற்சிக்குத் தாமாகவே ஆதரவளிப்பதாகவும் அதனை முழுமைபெறச்செய்வதற்கு தமது பங்களிப்பை வழங்குவதாகவும் எதிர்க் கட்சித் தலைவரே உறுதி அளித்திருந்தார்.

எந்தக் கட்சியும் இந்த விடயத்தில் பின்னடிப்பதாக சொல்லவில்லை. தமிழ்க் கட்சிகள் தண்ணோடு சேர்ந்து நிற்க வேண்டுமென அவர் விரும்புவது இனப் பிரச்சினைக்கான தீர்வோடு சம்பந்தம் இல்லாத விடயம். ஆனாலும் இந்தத் தீர்வு விடத்திலேயே நாங்கள் நெருக்கமாகப் பணியாற்றுவோம் அவ்வாறு நெருக்கமாகப்பணியாற்றியும் இருக்கின்றோம். தொடர்ந்துமநாங்களா அதைச் செய்வோம்

ஆனால் தன்னுடைய ஆட்சியிலே நாங்கள் சேராதது தான் தீர்வைக் காணமுடியாமைக்கான காரணம் என்று அவர் சொல்வாராக இருந்தால் அது நகைப்புக்குரிய ஒரு விடயம்.

அவர் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தால் அதற்குப் பிறகு மத்திய ஆட்சியிலே நாங்கள் என்ன விதமான பங்களிப்பைச் செய்ய முடியும் என்பதைப் பற்றிச் சிந்திக்கலாம்

அதற்கு முதலில் இனப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவேண்டும் தீர்வுக்கான எல்லா வழிமுறைகளும் எல்லாவரைவுகளும் ஏற்கனவே அவரிடம் இருக்கின்றன. எங்களுடையநிலைப்பாடுகள் அவருக்கு நன்றாகவே தெரியும். அதைநடைமுறைப் படுத்துவேன் என்று பல தடவைகள் அவர் சொல்லி விட்டார். ஆகவே அதனை நடைமுறைப்படுத்தவேண்டிய ஒரே ஒரு விடயம் தான் பாக்கியாக இருக்கிறது.

ஆகையினாலே திடீரென்று தமிழ் கட்சியில் பின்னடிப்பதால்தான் தன்னால் தீர்வைக் காணமுடியாமல் இருக்கிறது என்று பொய்யான ஒரு பழியை எங்கள் தலையில் அவர் சுமத்த முடியாது என்பதை திட்டவட்டமாக ஜனாதிபதிக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றோம் - என்றார். (03)

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய ரீதியில் கூடைப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கௌரவம்



(பழுவூரான்)

மட்டக்களப்பு, மே 03

இலங்கைகூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கனிஷ்ட தேசிய கூடைப்பந்தாட்ட (பிரிவு -2) சுற்றுப்போட்டியில் தேசிய ரீதியில் சம்பியன் பட்டம் வென்ற மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 23 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணியினரைக்கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பாடுமீன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்டச்சம்மேளனத்தின்தலைவர்பொறியியலாளர் எஸ்.ஜெயன் பார்த்தசாரதி தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இயேசு சபைத் துறவி வணக்கத்திற்குரிய அருட் தந்தை போல் சற்குணநாயகமும், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட கூடைப் பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் டி.சி. ரொசாரியோ, பொருளாளர் எஸ்.சுதாகர், உபதலைவர்எம்.பரணிதாசன், நிர்வாகசபைஉறுப்பினர்சுரேஷ் ரொபட், முன்னாள் தலைவர் கே. ராஜேந்திரா, செயலாளர் கே.ஜே. பிரியேந்திரன், அணி பயிற்றுவிப்பாளர் வி. விவேக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றியசம்மேளனத்தலைவர் எஸ். ஜெயன் பார்த்தசாரதி, அணி வீரர்களையும், பயிற்றுவிப்பாளர்களையும் பாராட்டியதுடன், 1996ஆம்ஆண்டின் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட அணியொன்று தேசிய ரீதியில் வெற்றி பெற்றுள்ளமை மகிழ்ச்சிக்குரியது எனத் தெரிவித்தார். மேலும் மட்டக்களப்பு மாவட்ட கூடைப் பந்தாட்ட சம்மேளனம் சிரமங்களுக்கு மத்தியில் இயங்குவதாகவும், நிதிப்பற்றாக்குறை முக்கியபிரச்சினையாகஉள்ளது என்றும் இருப்பினும் மாவட்ட கூடைப்பந்தாட்டத் துறையை இன்னும் முன்னேற்ற அர்ப் பணிப்புடன் செயற்பட தமது குழாம் தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

மேலும் கூடைப்பந்தாட்ட சம்மேளனத்துக்குரிய மைதானம், அலுவலகம் ஆகியவற்றின் தேவைப்பாட்டையும் சுட்டிக் காட்டினார்.

பிரதம விருந்தினர் அருட்தந்தை போல் சற்குணநாயகம் உரையாற்றுகையில் மாவட்டத்தின் கூடைப் பந்தாட்டப் பாரம்பரியத்தை எடுத்தியம்பினார். கூடைப்பந்தாட்டம் மட்டக்களப்பின் அடையாளமாகும். அத்தோடு முன்னைநாள் இயேசுசபைத் துறவிகளான வண ஹேவர்ட், வண. வெபர் ஆகியோ ரின் அர்ப்பணிப்புளையும் சுட்டிக் காட்டினார்.

மேலும் வளர்ந்து வரும் வீரர்கள் மேலும் பயிற்சிகளை அதிகரிப்பதுடன், அர்ப்பணிப்புடன் செயற்பட்டு பல வெற்றிகளை குவித்து மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்றார்.

# அரச எதிர்ப்பு போராட்டங்களை ஒன்றிணைத்து செயற்படுவோம்

## உதய கம்மன்பில எச்சரிக்கை

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் இரத்து செய்யப்பட்டு ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்கும்வகையில்தேசிய பாதுகாப்புசட்டம்உருவாக்கப்பட வேண்டும்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். இந்த சட்டமூலத்துக்கு எதிரான போராட்டங்களை ஒன்றிணைப்போம் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக இரத்து செய்யப்பட்டு ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் ஆகிய அம்சங்களைப் பாதுகாக்கும் வகையில் தேசிய பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் பெரும்பாலான ஏற்பாடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகள், அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டும் ஊடகங்கள், ஊடகவிலாளர்கள், தொழிற்சங்கத்தினர் அனைவரும் பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படுவார்கள்.

ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சிகளின் பேச்சுரிமை முடக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டால் சர்வா திகாரத்தை மாத்திரம் முன்னிலைப்படுத்தி அரசாங்கம் செயற்படும்.

ஜனநாயகம் பேச்சளவில் மாத்திரமே செயற்படுத்தப்படும். ஒரு நபரின் வன்முறையான செயற்பாட்டை ஊடகங்கள் வெளியிடும் போது அதனை அரசாங்கம் பயங்கரவாதமாகக் கருதுமாயின் அந்த செய்தியை வெளியிட்ட ஊடகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இந்த சட்டமூலத்தின் ஊடாக வழங்கபட்டுள்ளது.

நாட்டில் உள்ள சகல அரச நிறுவனங்களும் தங்களின் தொழில் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள். தொழிற்துறையில் பாரிய குறைபாடுகள் காணப்படுவதால் தான் தொழிற்சங்கத்தினர்போராட்டத்தில்ஈடுபடுகிறார்கள்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அரச சேவையாளர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில்ஈடுபட முடியாது. ஜனாதிபதிஎந்தசேவையையும் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்த முடியும். அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு சேவைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தப்படுவார்கள்.

சட்டமூலத்தின் 82 ஆவது உறுப்புரையில் ஜனாதிபதி தான் விரும்பும் அமைப்புக்களைத் தடை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின்கொள்கைகளை விமர்சிக்கும் அமைப்புக்களை ஜனாதிபதியால் தடைசெய்ய முடியும். ஆகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதமானது. நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் இரத்து செய்யப்பட்டு, ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில் தேசிய பாதுகாப்புசட்டம்உருவாக்கப்பட வேண்டும். - என்றார்.




# பாடசாலைப் போக்குவரத்து கட்டணத்தை குறைக்கமுடிவு

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் வாகனங்களின் கட்டணத்தை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பாடசாலை சிறுவர் போக்குவரத்து சங்கம் இதனை நேற்று (செவ்வாய்க்கிழமை) தெரிவித்துள்ளது.

இந்த வாரம் முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலையை குறைக்க எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன் தலைவர் குறிப்பிட்டார்.

# செப்ரெம்பர் மாதம் வரை மின்சாரம் தடைப்படாது

மற்றுமொருநிலக்கரி கப்பல்செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வரவுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனால் மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரிக்கு பற்றாக்குறை ஏற்படாது என்றும் அந்நிறுவனம் கூறியுள்ளது.

நாட்டின் மின்சார உற்பத்திக்குத் தேவையானநிலக்கரிகையிருப்பு இருப்பதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை இலங்கைக்குத் தேவையான நிலக்கரி இருப்புக்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என அந்நிறுவனத்தின் தலைவர் ஹோரன் சுமனசேகர தெரிவித்துள்ளார்.

இதனால் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை எவ்வித பிரச்சினையுமின்றி இயக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுவரையில் 29 கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளன என்றும் நேற்று 30 ஆவது கப்பல் இலங்கைக்கு வந்தடைந்தது என்றும் ஹோரன் சுமனசேகர தெரிவித்துள்ளார்.

# விசேட வைத்திய நிபுணர்களுக்கு இலங்கையில் பற்றாக்குறை

நாட்டின் பல வைத்தியசாலைகளில் விசேட வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாக மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைக்கு தீர்வைக்காணாவிட்டால் பல வைத்தியசாலைகள் மூடப்படும் ஆபத்து இருப்பதாகவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியக் கொள்கை காரணமாக அரசாங்கஊழியர்கள்அறுபது வயதில் ஓய்வுபெற வேண்டிய நிலை காணப்படுவதாலும் வைத்திய நிபுணர்கள் பெருமளவில் நாட்டிலிருந்து வெளியேறுவதாலும் இந்தப் பற்றாக்குறை காணப்படுவதாக மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அக்கரைப்பற்று, காத்தான்குடி, கல்முனை, கிண்ணியா, ஏறாவூர், திருகோணமலை, கந்தளாய், கிளிநொச்சி முல்லைத்தீவு உட்பட பல வைத்தியசாலைகளில் விசேட நிபுணர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாக விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது கிராமப்புற வைத்தியசாலைகளில் மாத்திரம் காணக்கூடியதாக உள்ள இந்த பற்றாக்குறை எதிர்காலத்தில் நாட்டின் பிரதான வைத்தியசாலைகளிலும் உருவாகலாம் என்றும் விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

### பயிற்சிக்காக வெளிநாடு சென்றுவிட்டு

# 67 விசேட வைத்தியர் நிபுணர்கள் இன்னும் இலங்கை திரும்பவில்லை

## சுகாதார அமைச்சு தகவல்

பயிற்சிக்காக வெளி நாடு சென்ற 67 விசேட வைத்தியர் நிபுணர்கள் இந்த வருடம் இலங்கைக்கு திரும்பவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அவர்கள் வெளிநாட்டில்தங்கி இருக்கின்றனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேலகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பயிற்சிக்காக வெளிநாடுசென்ற சுமார்400வைத்தியர்கள் இதுவரை நாடு திரும்பவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்தெரிவித்துள்ளார்.

# விபத்துக்குள்ளான பஸ்ஸில் சிக்கிய பயணிகள் ஏணி மூலம் வெளியேற்றம்





மிரிஸ்வத்த-வத்துருகம வீதியில் இதுருகல்ல, மஹவல கல்வெட்டுக்கு அருகில் பஸ் ஒன்று வீதியைவிட்டுவிலகிவிபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹங்வெல்லயிலிருந்துநீர்கொழும்புநோக்கிச் சென்றுகொண்டிருந்தஅங்கொடை டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸே விபத்துக்குள்ளானதுடன், பல பயணிகள் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

விபத்து ஏற்பட்டதையடுத்து அதற்குள் சிக்கியிருந்த பயணிகளை ஏணியின் உதவியுடன் வெளியே எடுக்க வேண்டிய ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மையில் யார் தூர விலகிச் செல்கிறார்கள்?

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய தொழிலாளர் தின உரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் பரவலான கவனத்தைப் பெற்றுள்ளன.

“நாட்டில் உள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இதுகுறித்து பேச்சு நடத்தி வருகின்றோம். இந்த வருட இறுதிக்குள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளேன். யாருக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது. பெரும்பான்மை சிங்கள மக்களையும், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களையும் பாதுகாத்துக்கொண்டு முன்நோக்கிச் செல்லவேண்டும். இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டும்.

இனப் பிரச்சினை விடயத்தில் தூரமாகிச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் தமிழ்க் கட்சிகளிடம் கூறுகின்றேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமாயின், தயவுசெய்து இந்தப் பொறிமுறைக்குள் வந்து விசேடமாக நாடாளுமன்றத்தில் ஓர் ஆட்சியாக நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோம்” – என்று ரணில் தனது உரையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகக் கூறியிருந்தார்.

இலங்கையில் சிங்கள பௌத்த தேசீய வாதத்தால் தமிழ், முஸ்லிம் இனங்களே பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. தொடர்ச்சியாக இந்த இரு இனங்களும் சிங்கள ஆட்சி அதிகாரத்தால் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டு வந்திருக்கின்றன. தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டு அது தொடர்பில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்த் தலைவர்களுடன் பேசி மேற்கொண்ட ஒப்பந்தங்கள் எல்லாம் இடைநடுவில் கிழித்தெறியப்பட்டு தமிழர்களுக்கு மீண்டும் மீண்டும் அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது. தந்தை செல்வா – பண்டா ஒப்பந்தம் மட்டுமல்ல செல்வா – டட்லி ஒப்பந்தம் மட்டுமல்ல வரலாற்றில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் தரப்புடன் செய்ததுகொண்ட எந்தவொரு அமைதித் தீர்வுக்கான ஒப்பந்தத்தையும் நிறைவேற்றியதே இல்லை.

அப்படிப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நீதியை வழங்கவேண்டிய கடப்பாடு இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வு அதனடிப்படையீல் அமையவேண்டிய அவசியமும் இருக்கின்றது. இதற்குள் “சிங்கள மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத தீர்வு” என்கிற பதம் ஏன் வருகின்றது. எப்போது தீர்வு குறித்துப் பேசப்பட்டாலும் யாருக்கும் பாதிப்பு ஏற்படாமல், சிங்கள மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாமல் ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் மீண்டும் மீண்டும் சொல்வதில் எந்த அர்த்தமும் இல்லை. இங்கே பாதிக்கப்பட்ட தரப்புக்களான தமிழ், முஸ்லிம் மக்களுக்குத்தான் தீர்வு வேண்டியிருக்கிறது. சிங்களவர்கள் ஒருபோதும் தமிழ், முஸ்லிம் மக்களால் பாதிக்கப்படவில்லை. அப்படியிருக்கின்றபோது “சிங்களவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத தீர்வு” என்கிற பதம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவதற்கான தேவை என்ன?

இந்த நாட்டில் சிங்களவர்களிடம் இருந்துதான் தமிழ், முஸ்லிம் மக்களைக் காப்பாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. அப்படியிருக்கும்போது, “பெரும்பான்மை சிங்கள மக்களையும், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களையும் பாதுகாத்துக்கொண்டு முன்நோக்கிச் செல்லவேண்டும்” என்கிற கருத்து ஏன் வருகின்றது? சொந்தச் சிங்கள ஆட்சியாளர்களால் அன்றி வேறு யாராலும் அல்லது எந்தச் சக்தியாலும் சிங்களவர்களுக்கு அச்சுறுத்தல் இல்லாதபோது சிங்கள மக்களையும் பாதுகாத்துக்கொண்டு என்று தலைவர்கள் கூறுவதன் மூலம் சிங்கள மக்களை அச்சமடைய வைப்பதன் பின்னணி என்ன?

அதேபோன்று, “தமிழ்க் கட்சிகள் இனப்பிரச்சினை விடயத்தில் தூரமாகிச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் தமிழ்க் கட்சிகளிடம் கூறுகின்றேன்” என்று தெரிவித்திருக்கிறார் அரசுத் தலைவர். போர் முடிந்ததிலிருந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலிருந்து தமிழ்க் கட்சிகள் தூர விலகிச் சென்றதில்லை. இன்னும் சொல்லப்போனால் மைத்திரி – ரணில் தலைமையிலான நல்லாட்சி என்று சொல்லப்பட்ட ஆட்சியில் ரணில் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்துகொடுத்து ஒற்றையாட்சி, பௌத்தத்திற்கு முன்னுரிமை என்றெல்லாவற்றையும் விட்டுக் கொடுத்தும் இருந்தன தமிழ்க் கட்சிகள். இப்போதும்கூட, முதலில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்திவிட்டு பின்னர் தீர்வுக்குப் போகலாம் என்று ஒத்துழைக்கவும் அவை தயாராக இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் தமிழ்க் கட்சிகள் தூரமாகிச் செல்வதாகப் பொய்யுரைப்பது யாரை ஏமாற்றுவதற்காக?

தமிழர்களுடனான அமைதி முயற்சிகளில் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் நேர்மையாக, உளச்சுத்தியோடு, செயற்பட்டவர் அல்லர் ரணில் விக்கிரமசிங்க. தீர்வுக்கான முயற்சி என்று எதையாவது முன்வைத்து காலத்தை இழுத்தடிப்பதையும் ஏமாற்றுவதையும் மட்டுமே அவர் செய்து வந்திருக்கிறார். அப்படிப் பார்க்கும் இனப்பிரச்சினை விடயத்தில் தூரமாகிச் செல்பவர் ரணில்தான். எனவே அடுத்தவர் மீது பழிபோட்டு காலத்தைக் கடத்தும் பழைய, சலித்துப்போன பொய்களைவிட்டுவிட்டு இனியாவது சொல்வதைச் செய்வதற்கு முன்வரவேண்டும் அரசுத் தலைவர்.

# ராஜபக்ஷக்களால் ஆறு லட்சம் பேர் தொழில் வாய்ப்புக்களை இழந்தனர்

## சம்பிக்க சுட்டிக்காட்டு



உழைக்கும் மக்களுக்கான மே தின கூட்டம் அரசியல் கூட்டமாக மாற்றமடைந்து விட்டது. தொழிலாளர்களின் உரிமை பற்றி பேசும் ராஜபக்ஷர்களால் கடந்த ஓர் ஆண்டுக்குள் மாத்திரம் ஆறு லட்சம் பேர் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளார்கள் என 43 ஆவது படையணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ராஜகிரிய பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

மேதினகூட்டம் அரசியல் கூட்டமாக மாற்றமடைந்து விட்டது. மே தின கூட்ட மேடைகளில் அரசியல்வாதிகள் தங்களின் எதிர்கால அரசியல் தொடர்பில் கருத்துரைக்கிறார்களே தவிர தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பில் எவரும் கருத்துரைக்கவில்லை.

தொழிலாளர்களின் உரிமை தொடர்பில் ராஜபக்ஷர்கள் மே தின கூட்டத்தில் கருத்துரைக்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்கள் பொருளாதார ரீதியில் எடுத்த தவறான தீர்மானங்களால் கடந்த ஓத் ஆண்டு காலப்பகுதியில் மாத்திரம் சுமார் ஆறு லட்சம் பேர் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளார்கள்.

நாட்டுமக்களின் தொழில் உரிமை, நிம்மதியாக வாழும் உரிமை ஆகியவற்றை இல்லாதொழித்த ராஜபக்ஷர்கள் இன்று உழைக்கும் மக்களின் உரிமை பற்றி பேசுகிறார்கள். தங்களின் அரசியல் நோக்கத்துக்காக தொழிலாளர்களின் உரிமைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

எரிபொருள், எரிவாயு, அத்தியாவசிய பொருள்களின் விலைகுறைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுந்து விட்டோம் எனக் கருத முடியாது. வெளிநாட்டு கடன்களை மீள செலுத்தாத காரணத்தால் இந்த சேவை கட்டமைப்பில் தற்காலிக நிவாரணம் கிடைக்கப் பெற்றுள்ளது. நிலுவையில் உள்ள கடன்களால் பாரிய நெருக்கடிகள் எதிர்காலத்தில் தோற்றம் பெறும் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தூர நோக்கமற்ற வகையில் இரத்து செய்தார். இதனால் இலங்கை சிறந்த வாய்ப்பை இழந்துள்ளது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார். இலகு ரயில் அபிவிருத்தி செயற்திட்டத்தின் பயனை பங்களாதேஷ் பெற்றுக்கொண்டது. இலகு ரயில் அபிவிருத்தி திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அரசமுறை கடன்கள் மீள செலுத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ள பின்னணியில் இலகுரயில் அபிவிருத்தி செயற்திட்டத்துக்கு ஜப்பான் நிதியுதவி வழங்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது. - என்றார்.

# பாடசாலைகளுக்கிடையிலான கிறிகெட் போட்டிகளுக்கு பொலிஸ் அனுமதி பெற்று பொறுப்புடன் ஒழுங்குபடுத்துக

## பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு



களுத்துறை திஸ்ஸ தேசிய பாடசாலைக்கும் களுத்துறை மகா வித்தியாலயத்திற்கும் இடையிலான மாபெரும் ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் (பிக் மேட்ச்) முடிவில் விளையாட்டு மைதானத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

போட்டியின் முடிவில் களுத்துறை மகா வித்தியாலயம் கடைசி ஓவரில் வெற்றிபெற்றதையடுத்து, இரு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் மைதானத்துக்குள் பிரவேசித்ததால் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான நட்பை வளர்க்கும் வகையில் நடத்தப்படும் மாபெரும் கிரிக்கெட் போட்டிகளை முறையாக ஒழுங்குபடுத்தும் பொறுப்பு அதனை ஏற்பாடு செய்யும் சகல தரப்பினரதுமாகும். ஒழுக்கத்தை பேணி அதனை செய்வதில் கவனம் செலுத்த வேண்டுமென பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பயாகல மைதானத்தில் இடம்பெற்ற ஒரு நாள் பாடசாலை கிரிக்கெட் போட்டியின் நிறைவின் பின்னர் பாடசாலை மாணவர்கள் குழுவொன்று மோதலை ஏற்படுத்தும் விதமாக செயற்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

குறித்த மோதலின் போது பொலிஸார் தலையிட்டு சம்பவத்தை கட்டுப்படுத்தினர். அப்போது எந்த முறைப்பாடும் பொலிஸாருக்கு கிடைக்கப்பெறவில்லை. எவ்வாறாயினும் திங்கள் காலை எதிரணி பாடசாலை மாணவர்களால் தனது மகன் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என மாணவன் ஒருவரின் தாயார் பயாகல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மோதலின் போது பயாகல பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்புப் பிரிவின் அதிகாரி தாக்கப்பட்டார் என சமூக ஊடகங்களில் பரவி வரும் செய்தி உண்மையில்லை.

எனினும், களுத்துறை திஸ்ஸ கல்லூரியின் கிரிக்கெட் அணியின் உப தலைவர் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு கிரிக்கெட் மட்டையால் தலையில் தாக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் களுத்துறை, நாகொட வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று தலையில் விசேட சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளதால் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்படவுள்ளார்.

இதேவேளை, பாடசாலைகளுக்கிடையிலான நட்பை வளர்க்கும் வகையில் நடத்தப்படும் பிக் மேட் போட்டிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு அதனை ஏற்பாடு செய்யும் சகலருக்கும் பொருந்தும். ஒழுக்கத்தை பேணி அதனை செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், பாடசாலை அமையப்பெற்றுள்ள பொலிஸ் பிரிவுக்குரிய பொலிஸாருடன் கலந்துரையாடி அனுமதிப்பெற்று இவ்வாறு போட்டிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். - என்றார்.

# 8 இலங்கையர்கள் உட்பட 26 மாலுமிகளுடன் தடுத்துவைக்கப்பட்டிருந்த கப்பல் விடுவிப்பு



## நைஜீரிய நீதிமன்று உத்தரவு

ஓகஸ்ட் 2022 முதல் நைஜீரியா மற்றும் ஈக்குவடோரியல் கினியாவில் சர்ச்சைக்குரிய எண்ணெய் கடத்தல் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்பல் ஏப்ரல் 28 அன்று போர்ட் ஹார்கோர்ட்டில் உள்ள நைஜீரியாவின் பெடரல் உயர் நீதிமன்றத்தால் எட்டு இலங்கையர்களை உள்ளடக்கிய மாலுமிகளுடன் விடுவிக்கப்பட்டது.

நைஜீரிய அதிகாரிகளுக்கும், கப்பல் உரிமையாளரான இடன் மரிடைம் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கப்பலின் நீதிமன்ற காவலை நிறுத்துவது மற்றும் குற்றச்சாட்டுகளை கைவிடுவது குறித்து உயர் நீதிமன்றம் முடிவு செய்தது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்பலில் எட்டு இலங்கை பணியாளர்கள் உட்பட 26 மாலுமிகள் இருந்தனர்.

அபராதம் மற்றும் பிற நிபந்தனைகளை கப்பல் நிறுவனம் பூர்த்தி செய்தவுடன், இலங்கை பணியாளர்களை விரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகளை இலங்கை வெளியுறவு அமைச்சகம் கப்பல் உரிமையாளருடன் செய்து வருகிறது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் வேண்டுகோளின்படி, கென்யாவின் நைரோபியில் உள்ள உயர்ஸ்தானிகராலயம் உதவிகளை வழங்கியதுடன், சட்ட நடவடிக்கைகள் முடியும் வரை இலங்கை பணியாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தது.

கென்யாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கனநாதன், நவம்பர் 13,2022 அன்று நைஜீரியாவின் லாகோஸில் கப்பலில் இருந்த இலங்கை பணியாளர்களை சந்தித்து அவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்தார்.

நீதிமன்றக் காவலில் வைக்கப்படாமல் அவர்களது கப்பலிலேயே பணியாளர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்ய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார். உயர்ஸ்தானிகர் கனநாதன் இலங்கையர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய உரிமைகளை முழுமையாக வழங்குவதை உறுதி செய்தார்.

குழு உறுப்பினர்களில் 16 இந்திய பிரஜைகளும் இருந்ததால், கென்யாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் அபுஜாவிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து இது தொடர்பில் செயற்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
# துணைவேந்தர் பதவி

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரி அழைபபு விடுக்கின்றது. பதவிக்கான தெரிவு 03/2023 இலக்க 10.04.2023 திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள முறையில் இடம்பெறும் என விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளவர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளததின் **https://www.ugc.ac.lk/attachments/**2442_Commission%20Circular%20No.%2003-2023.pdf இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் 63 வயதிற்குப்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி, புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் எட்டு பீடங்களையும் கிளிநொச்சியில் மூன்று பீடங்களையும் (எல்லாமாக 11 பீடங்களை) கொண்டமைந்து ஏறத்தாழ பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு பட்டதாரி மாணவர்களையும் அறுநூறு உயர் பட்டதாரி மாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித் துணை புரியமாறு எதிர் பார்க்கப்படுகிறார்.

2. துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங் காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங்கலாக அவரது தலைமைத்துவம் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமைஎன்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல்இ ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல்இ அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில்

உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மைஇ பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக்கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15மூ இனை உபசாிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

3. விண்ணப்பங்கள் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.

1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.
2. விண்ணப்பதாரி பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.
3. தற்போது இப் பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி எனின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர்காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையிலான அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரி அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் “பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்” என முகவரியிட்டு மூடிய கடித உறையில் 02.06.2023 அன்று பி.ப 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘துணைவேந்தர் பதவி’ எனக் குறித்திருக்க வேண்டும்.

மேலதிகமாக, மேலே உள்ள ஆவணங்கள் மற்றும் கையடக்க ஆவண வடிவமைப்பு (PDF) வடிவத்தில் உள்ள வேறு ஏதேனும் துணை ஆவணங்களின் மென்பிரதி எனது மின்னஞ்சல் முகவரி: சநபளைவசயசஅரளைை.தகெ.யஉ.டம இற்கு 02.06.2023 அன்று முடிவடைவதற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 03/2023 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, விண்ணப்பங்கள் முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டிற்காக மறறும் நேர்காணலுக்காக பேரவை செயலாளரினால் சிறப்பு பேரவைக் கூட்டம் வேலை நாள் ஒன்றில் கூட்டப்படும். ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு நேரில் தோன்ற முடியாத நிலையில், செயலாளரிற்குத் தரும் முன்னறிவித்தல் மூலம் நிகழ்நிலையில் **(virtual mode)** தோன்ற அனுமதிக்கப்படுவார்.

ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த்துவதற்கு விண்ணப்பதாரர்கள் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போது பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 03/2023 இன் படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார்செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.

மேற்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண். 03/2023 இன்படி எமது 27.01.2023 அன்று திகதியிடப்பட்ட முன்னைய விளம்பரமும் அதன் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் வலிதற்றதாக்கப்பட்டிருப்பதையும் துணைவேந்தர் நியமனத்திற்கான செயன்முறைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்கண்ட சுற்றறிக்கைக்கு அமைவாக புதிதாக தொடங்குகின்றன என்பதையும் அறியத்தருகின்றேன்.

முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படா.

**விசுவநாதன் காண்டீபன்**
**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்**
**பதிவாளர் அலுவலகம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**02.05.2023**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

பேரூந்து, வான், முச்சக்கரவண்டி மற்றும் சிறியவகை காவுவண்டி, (Mini Truck) போன்ற வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல் (Invitation for Bid) -2023-2024

தவிசாளர், கொள்வனவுக் குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (On Call) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகுதிவாய்ந்த கம்பனிகள், அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் | தேவைப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான். /Passenger Van | 10-16 | 05 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.2 | பிரயாணிகள் வான். /Passenger Van | 08-10 | 05 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus | 42-54 | 05 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck 1500 – 2500 kg | 02 | 02 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.5 | முச்சக்கரவண்டி / Three wheeler | 03 | 01 | கிளிநொச்சி |

விண்ணப்பிக்க தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை மே மாதம் பதினைந்து (15) ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**2.** சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.

**3.** வாகன முற்பதிவானது 2012ம் ஆண்டிற்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**4.** வாகனங்கள் சேவை வழங்கும் நாட்களில் அதன் கிலோமீற்றர், மற்றும் நேரம் ஆகியவற்றின் பதிவுகள் அனைத்தும் பல்கலைக்கழகத்தின் சார்பில் உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம் அவர்களால் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரால், மேற்பாஉவை செய்யப்படும்.

**5.** பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் பிரதானவளாகத்தில் இருந்தும் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தில் இருந்து கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

**6.** நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை கொண்டிருத்தல் அவசியமானது

* பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்

* தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் அவரது பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்ப்பட்டு இருத்தல் வேண்டும்.

* குறைந்தது மூன்று (03) வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.

* வருடாந்த வருமானம் கடந்த மூன்று (03) வருடங்களில் குறித்த ரூபாயினை குறைந்த வருமானமாக ஈட்டியிருத்தல் வேண்டும்.

1.1 பிரயாணிகள் வான், /Passenger Van (12 - 16 இருக்கைகள்) ரூ 500.000.00
1.2 பிரயாணிகள் பேருந்து /Passenger Van (08 - 10 இருக்கைகள்) ரூ 500.000.00
1.3 பிரயாணிகள் பேருந்து /Passenger Bus ( 45 - 10 இருக்கைகள்) ரூ 500.000.00
1.4 சிறியவகை காவுவண்டி /Mini Truck 1500 – 2500 kg (02 இருக்கைகள்) ரூ 500.000.00
1.5 முச்சக்கரவண்டி / Three wheeler (03 இருக்கைகள்) ரூ 100.000.00

* குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

**7.** கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள், மற்றும் வணிகத்தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல்வேண்டும் அத்துடன் அவற்றிற்கான உரிய சான்றுகள், மற்றும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**8.** கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு (Bid security) வைப்புப்பணமாக ரூபா 15,000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து 12.09.2023 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்புப் வைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக, காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுகொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**9.** முழுமையான கேள்வி விண்ணப்பத்தினை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூபா 3,000. 00 நிதியாளர் யாழ்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கி 970000060000276 கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து உதவிப்பதிவாணர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**10.** பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கேள்வி மனுவிற்கான பாதுகாப்புப் பணப் பத்திரம் (Bid security Certificate) மற்றும், விண்ணப்பச் செயலாக்கப் பணப் பற்றுச்சீடு (Application Processing fees) என்பன இணைத்து அனுப்புதல் வேண்டும், மேற்குறித் பத்திரங்கள் இணைக்கப்படாத, முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

**11.** பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூலஆவணம் (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாக பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “அழைப்பின் பெயரில் (On Call) / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் - 2023 - 2024” எனத் தலைப்பிட்டு தவிசாளர், கேள்விச்சபை, த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 15.05.2023 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது கையளித்தல் வேண்டும்.

**✱ ஏலத் திறப்பு (Bid Opening)**

1. திகதி:- 15.05.2023
2. நேரம்:- 02:00ிஅ
3. இடம்:- பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
4. ஏலம் திறக்கப்பட்டு முதல் விலை ஏலங்கள் மதிப்பிடப்படும் பின்னர் தொழில் நுப்ப ரீதியில் ஏலங்கள் மதிப்பிடப்படும்
5. ஏலம் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார்பிரதிநிதிகளில் ஒருவர் சமூகமளித்தல் வேண்டும்

மேலதிக தகவல்களுக்கு: உதவிப்பதிவாளர்/ பொதுநிர்வாகக் கிளை – Tele: 021 2226517, Fax:- 021 2226517.
தலைவர், கேள்விச்சபை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Fax No: 021 222 6517.Email: **administration@univ.jfn.ac.lk.com.** University of Jaffna P.O. Box 57, Thirunelvely, Jaffna


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.05.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.


பக்கங்கள்: 04

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 19 செவ்வாய்க்கிழமை 02.05.2023 கதிர் 46

## 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

### பல மாவட்டங்களில் இன்றும் மழை




நாட்டின் பல பகுதிகளில் இன்றும் இடைக்கிடையே மழைஅல்லதுஇடியுடன்கூடிய மழை பெய்யும் என்று வளிமண்டலவியல்திணைக்களம் அறிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், யாழ்ப்பாணம், மன்னார், நுவரெலியா, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் இன்று 75 மில்லிமீற்றர்

(2)



## நள்ளிரவு முதல் லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு

இன்று நள்ளிரவு முதல் 12.5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை குறைக்கப்படவுள்ளது என்று அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறித்த எரிவாயுவின் விலை குறைந்தது 100 ரூபாவால் குறைக்கப்படும்என்றுஅவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் அமுலாகும்வகையில் 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோசமையல்எரிவாயுவின் விலை 1005 ரூபாவால் குறைக்கப்பட்டது.

இந்தநிலையில்குறித்த எரிவாயு கொள்கலன் தற்போது 3 ஆயிரத்து 738 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இந்நிலையில், இன்று நள்ளிரவு முதல் இந்த விலையில், மாற்றம் ஏற்படும் என்று லிட்ரோ நிறுவனம்அறிவித்துள்ளது. (02)

## காற்றில் பறக்கும் ரணிலின் வாக்குறுதிகள்

# விரைந்து சில தீர்மானங்களை தமிழ் அரசுக் கட்சி அறிவிக்கும்

### சம்பந்தன் திட்டவட்டம்




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் சில முடிவுகளை அரசுக்கு அறிவிக்கும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசால் ஆரம்பிக்கப்பட்ட சர்வகட்சிப்பேச்சு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமை தொடர்பிலும், தீர்வு முயற்சிகள் மந்தகதியில் உள்ளமை குறித்தும் இரா. சம்பந்தனிடம் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

தற்போதைய நிலைமையில் அரசின் செயற்பாடுகள் மந்தகதியில் அல்ல, துப்பரவாக எதுவுமே நடைபெறவில்லை. வாக்குறுதிகள் மாத்திரமே அரசால் வழங்கப்படுகின்றன. ஆனால், நடைமுறையில் எதுவும் இல்லை. அதுதான் உண்மை. இந்த விடயம் சம்பந்தமாக நாம் செய்ய வேண்டியது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். விரைவில் சில முடிவுகளை அறிவிப்போம். - என்றார். (02)

## குளவி கொட்டி ஏழு மாணவர்கள் வைத்தியசாலையில்



பொகவந்தலாவை - எல்பட தமிழ் வித்தியாலயத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்கான 7 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை மாணவர்கள் பாடசாலைக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை முதல் பாடசாலை வளாகத்தில் குளவிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் பாதுகாப்பு காரணமாக இன்று மாணவர்கள்பாடசாலையில் இருந்துவெளியேற்றப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் தொடர்ந்தும் குளவிப் பிரச்சினை தொடர்வதாக அந்தப்பகுதிமக்கள்கவலை வெளியிடுகின்றனர். (02)

## பேச்சை நிறுத்துங்கள்; செயலில் காட்டுங்கள்!

### ரணிலிடம் மனோ இடித்துரைப்பு



இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு, பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம் என்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால், இக்கதையை நீங்கள் கடந்த சுதந்திர தினத்துக்கு முன்னிருந்து சொல்லி வருகின்றீர்கள். பெப்ரவரி நான்காம் திகதியளவில் தீர்வு காண்போம் என்றும் கூறினீர்கள். இப்போதும் மீண்டும், மீண்டும் கூறுகின்றீர்கள். இலங்கையில் வாழும் ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்கள் தொடர்பான இனப்பிரச்சினை தொடர்பில், உங்களுடன் முழுமையாக ஒத்துழைக்க நாம் தயார். ஆனால், இனி நீங்கள் பேச்சை நிறுத்தி, செயலில் காட்டுங்கள். வோக் யுவர் டோக் மிஸ்டர் பிரசிடென்ட்!. (பேச்சின்படி நடந்து காட்டுங்கள்!).

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மே தின உரை தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இன்று இருக்கும் பெரும்பான்மை கட்சிகளின் தலைவர்கள் மத்தியில், தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் காத்திரமான முயற்சிகளை எடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க. அதில் சந்தேகம் இல்லை. ஏனையோரைப் பற்றி சந்தேகங்கள் இருக்கின்றன.

எனினும், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமனம் பெற்ற பின் பலமுறை இந்தக் கால அட்டவணைக்குள் இனப்பிரச்சினை தீர்வு என பலமுறை கூறிவிட்டார். தமிழ் மக்களுக்கும் இந்த வசனம் பரிச்சயமானதாகும்.

சர்வகட்சி மாநாட்டை நடத்தி முதற்கட்டமாக 13ஐ பற்றி பேசிய போது அதுவரை ஒளிந்திருந்த ஆமதுருக்கள் தெருவுக்கு வந்தார்கள். அத்துடன் அது நின்று போய் விட்டது.

இன்று அரகல போராட்டத்துக்குப் பிறகு, கடுமையான பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு, சர்வதேச சமூகத்திடம் கையேந்தும் நிலைமை ஏற்பட்ட பிறகு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினை தீர்வு பற்றி, தமிழ்க் கட்சிகளை அழைத்துப் பேச முன் சிங்களக் கட்சிகளை அழைத்து நாட்டின் உண்மை நிலைமை பற்றிப் பேச வேண்டும். சிங்கள மக்களை

(2)

## வவுனியா நபரை கடத்தித் தாக்கினர் என்ற குற்றச்சாட்டில்

# ஹைஏஸ் வாகனத்தில் வந்த 11 பேர் பொலிஸாரால் கைது

ஹைஏஸ் ரக வாகனம் ஒன்றில் பயணித்த 11 பேரை யாழ். மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர். வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவரை யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி வந்து சித்திரவதை செய்தார்கள் என்கிற குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஹைஏஸ் வான் ஒன்றும் மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியாபூவரசம்குளம் பகுதியை சேர்ந்த 34 வயதுடைய தில்லைநாதன் சுமணன் என்பவரை இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி வந்து அடித்துச் சித்திரவதை செய்தனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:

வேலணையைச்சேர்ந்த சிலரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி அவர்களிடமிருந்து 10 லட்சம் ரூபா பணத்தை வாங்கியுள்ளார் சுமணன். ஆனால், நீண்டகாலமாகியும் அவர்களில் ஒருவரைக்கூட வெளிநாட்டுக்கு அனுப்ப அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(2)

## இ.போ.ச. ஊழியர் விபத்தில் இறப்பு



யாழ்ப்பாணம், கொடிகாமம் – பருத்தித்துறை வீதியில் எருவன் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

வடமராட்சி அல்வாய் பகுதியைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்துச்சபையில் பணிபுரியும் சத்தியநாதன் சத்தியானந்தன் (வயது 34) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும் வானும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில்பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு,சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம்தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தகொடிகாமம்பொலிஸார்வான் சாரதியைக் கைது செய்து மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர்.(02)

## பொலிஸாரை தாக்கிய கடற்படை நபர் கைது

வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரைத்தாக்கிக் காயப்படுத்திய, குற்றச்சாட்டில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களால் தாக்கப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்புபிரதேசகுற்றப் புலனாய்வுப்பிரிவின்பொலிஸ் குழுவொன்று நேற்று மாலை சீதுவ பகுதியில் போக்குவரத்து வீதிச் சோதனை கடமையில் ஈடுபட்டிருந்தது.

அதன்போது, அதிவேகமாகவந்த மோட்டார்சைக்கிளை நிறுத்துமாறு பொலிஸார் சைகை காட்டியுள்ளனர். அதனையும்மீறி சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் தொடர்ந்தும் பயணித்துள்ளனர்.

இதையடுத்து, குறித்த மோட்டார் சைக்கிளை இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் துரத்திச்சென்று, சீதுவநகருக்கு அருகில் தடுத்து நிறுத்தினர்.

விசாரணையில், சந்தேகநபர்கள் இருவரும் மதுபோதையில் இருந்தமை தெரியவந்ததையடுத்து, அவர்களை மேலதிக விசாரணைக்காகப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்ல முயன்றபோது, சந்தேகநபர்கள் தமது தலைக்கவசத்தால், குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரையும் தாக்கினர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு வந்த

(2)

## வெள்ளநீர் கால்வாயில் தவறி வீழ்ந்த நபர் சாவு




கிளிநொச்சி, இராமநாதபுரம் போலீஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டகச்சி, மாயவனூர் சந்தையடியில் மேதினத்தன்று பெய்த கடும் மழையால் கால்வாயில் ஓடிய வெள்ளத்தில் தவறி வீழ்ந்த ஒருவர் உயிரிழந்தார். வீட்டுக்கு அருகில் இருந்த கால்வாயிலேயே இவர் தவறி விழுந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். பாலசிங்கம் கிருஸ்னேஸ்வரன்தவம்(வயது64)என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மூன்றுபிள்ளைகளின் தந்தையான அவர், துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த போது தடுமாறி வாய்க்காலுக்குள் வீழ்ந்திருக்கலாம் என்று இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (113)

## சீருடையுடன் நடனமாடிய கான்ஸ்டபிள் பணிநிறுத்தம்

இசைநிகழ்ச்சியின்மேடையில்சீருடையில்நடனமாடினார் எனக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைப் பணி இடைநிறுத்தம் செய்யப் பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.




பேலியகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார். ஏப்ரல் 30 களனி – பியகமவிலுள்ள விளையாட்டரங்கில் இடம்பெற்ற இசைநிகழ்ச்சியின்போதே இந்தப்பொலிஸ் கான்ஸ்டபிள் மேடையில்ஏறி பாடகர் ஒருவரின் பாடலுக்கு சீருடையுடன் நடனமாடினார்என்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## முகக்கவசம் அணியுமாறு மீண்டும் அறிவுறுத்தல்

வெசாக் வாரத்தில் மக்கள் அதிகமாக வெளியே நடமாடுவதால் முகக்கவசம் அணிவது சிறந்தது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர்வைத்தியர்அசேலகுணவர்தன தெரிவித்துள்ளார்.

(2)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வந்தால் உறவுகள் சிறையில் அடைக்கப்படுவர்

## காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சங்கம் கவலை

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்பட்சத்தில், வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைத்தேடி ஜனநாயக ரீதியில் போராடிவரும் அனைத்துத் தாய்மாரும் சிறையில் அடைக்கப்படுவர். எதிர்வருங்காலங்களில் தமிழ்மக்கள் தமது அடிப்படை உரிமைகள் தொடர்பாகக் கனவிலும்கூட நினைத்துப்பாரக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்படுவர்.

எனவே பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்கும் அதேவேளை, இந்தப் புதிய சட்டமூலத்தை வாபஸ் பெறுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துங்கள் என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தன் சர்வதேச மன்னிப்புச்சபை உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச மன்னிப்புச்சபையின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து 'மனித உரிமைகளுக்கான பேரூந்தில் ஏறுங்கள்' என்ற மகுடத்தில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதை முன்னிறுத்தி பிரசாரத்தை முன்னெடுத்துவருகின்றனர்.

அந்தவகையில் இவ்வருடம் அந்தப் பிரசாரத்தின் ஓரங்கமாக இலங்கை, எகிப்து, ஹொங்கொங், சீனா, திபெத், ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் நிகழ் நிலை முறைமையிலான கலந்துரையாடலொன்றின் மூலம் ஆராயப்பட்டது.

அந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்று, இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் உரையாற்றுகையிலேயே லீலாதேவி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் சுட்டிக்காட்டிய முக்கிய விடயங்கள் வருமாறு –

வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளைத் தேடும் போராட்டம் கடந்த 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகி, 2258 ஆவது நாளாக இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட போது பெருமளவான தாய்மார் தமது அன்புக்குரியவர்களை இராணுவத்தினரிடம் கையளித்தனர். அதேபோன்று இலங்கை அரசாங்கத்தின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி பெரும் எண்ணிக்கையானோர் தமது பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் முன்னிலையில் தாமாகவே இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். அவர்களில் பலர் காணாமல்போயுள்ள போதிலும், 'அவர்கள் எங்கே?' என்ற கேள்விக்குத் தற்போதுவரை இலங்கை அரசாங்கம் உரியவாறான பதிலை வழங்கவில்லை. அதன்விளைவாக நாம் சர்வதேச சமூகத்திடம் எமக்கான நீதியைக்கோரிப் போராடிவருகின்றோம்.

எமக்கு நீதியை வழங்குவதற்கெனக் கடந்தகாலங்களில்பல்வேறு ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், அவற்றினூடாக எந்தவொரு முன்னேற்றகரமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பினரின் கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளைப் புறக்கணித்துவிட்டு, அரசாங்கத்தால் நிறுவப்பட்ட காணாமல்போனோர்பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளும் இதற்கு விதிவிலக்கானவை அல்ல. அடுத்ததாகத் தற்போது அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில், வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைத்தேடி ஜனநாயக ரீதியில் போராடிவரும் அனைத்துத் தாய்மாரும் சிறையில் அடைக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் நிலை காணப்படுகின்றது. இந்தச்சட்டத்தின்ஊடாகக் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் முழுமையாக முடக்கப்படும். நாம் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுவதாகக்கூறி அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுவோம். எதிர்வருங்காலங்களில் தமிழ்மக்கள் தமது அடிப்படை உரிமைகள் தொடர்பாகக் கனவிலும்கூட நினைத்துப்பாரக்கமுடியாது.

எனவே, நாம் சர்வதேச சமூகத்திடம் எமக்கான நீதியைக்கோரி மன்றாடுகின்றோம். அதேபோன்று இலங்கை இராணுவத்துக்கும் பொலிஸாருக்கும் நிதியளிப்பதை நிறுத்துமாறு அமெரிக்க காங்கிரஸிடம் எழுத்துமூலம் வலியுறுத்துமாறு உங்களிடம் கோரிக்கைவிடுக்கின்றோம். அதேபோன்று பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குமாறும், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை வாபஸ்பெறுமாறும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறும் அமெரிக்க உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் கேட்டுக்கொள்கின்றோம். – என்றார்.

# பிரதமர் பதவியிலிருந்து மஹிந்தவை விலகுமாறு அரசுக்குள் இருந்தோரே அழுத்தம் கொடுத்தனர்

## ஜோன்ஸ்டன் கோபாவேசம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை பலவீனப்படுத்த அரசாங்கத்துக்குள் எடுத்த சூழ்ச்சிகள் முழு நாட்டுக்குள் எதிர் விளைவுகளை ஏற்படுத்தியது. ஜனநாயக ரீதியில் மீண்டும் நாங்கள் ஆட்சியை கைப்பற்றுவோம். பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொரள்ளை கெம்பல் மைதானத்தில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

2022 ஆம் ஆண்டு மே 09 சம்பவம் தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ புத்தகம் வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்தை வீழ்த்த சர்வதேச மட்டத்தில் சூழ்ச்சிகள் காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடுகிறார். தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் சூழ்ச்சிகளை அவர் மறந்து விட்டார்.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாத காலப்பகுதியில் எரிபொருள், எரிவாயு, மின் விநியோக கட்டமைப்பில் திட்டமிட்ட வகையில் நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டன.

பொதுஜன பெரமுனவின் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை பதவி விலகுமாறு அரசாங்கத்துக்குள் இருந்தவர்கள் தான் கடுமையான அழுத்தம் பிரயோகித்தார்கள்.

2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனவால் ஜனாதிபதியாக முடியுமாக இருந்தால் தமக்கும் ஜனாதிபதியாக முடியும் என்ற எண்ணத்தில் பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறி ஹெலிகொப்டரில் ஏறினார்கள். இன்று அந்த ஹெலி கொப்டர் வானத்தில் பறக்க முடியாத அளவுக்கு உள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை பலவீனப்படுத்த அரசாங்கத்துக்குள் எடுத்த சூழ்ச்சிகள் முழு நாட்டுக்கும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தியது. ஜனநாயக ரீதியில் மீண்டும் நாங்கள் ஆட்சியை கைப் பற்றுவோம். பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம். – என்றார்.

# நாடாளுமன்ற உறுப்பினர் பதவி: டயானாவின் மனு விசாரணைக்கு



நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்காத உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி உயர் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

பிரியந்த ஜயவர்தன, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இங்கு, அரசமைப்பின் இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளிப்பதாக குற்றம் சுமத்தி பிரதிவாதிகள் தம்மை பதவியில் இருந்து நீக்குவதற்கு முயற்சித்துள்ளதாக மனுதாரர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

# ரணிலை ஆசியாவின் உச்சியில் அமர்த்த வேண்டியது எம் கடமை

## அவரின் சகா வஜிர கூறுகின்றார்

இன, மத பேதங்கள் அற்ற தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை ஆசியாவின் உச்சியில் அமர்த்த வேண்டியது எமது கடமையாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இன்று (01) நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'2048 வெல்வோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மே தினக் கொண்டாட்டத்தில் அவர் உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:–ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சி கண்டிருந்த போதும் கட்சியுடன் இணைந்திருந்தோரே இங்கு அதிகளவில் கூடியிருக்கின்றனர்.

1994 இற்குப்பிறகு ஏறக்குறைய முப்பது வருடங்களாக உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் ஒருவரை கண்டு அஞ்சின. அது தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே. அவரை வீழ்த்த எல்லா வழிகளிலும் முயன்றனர்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முயன்ற எமது கட்சின் தலைவர்கள் பலரும் எதிர்பாராத விதத்தில் மரணம் அடைந்தனர். ஜே.ஆர்.ஜயவர்தன, பிரேமதாஸ, லலித் அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்க போன்ற தலைவர்கள் வீதிகளில் கொல்லப்பட்டனர். ஆனாலும், ரணில் விக்ரமசிங்க என்ற ஒரு தலைவர் மிஞ்சி இருந்தமையாலேயே இன்று கொழும்பைச் சுற்றி இடம்பெறும் மே தினக் கூட்டங்களுக்கு வருவதற்கு மக்களுக்கு எரிபொருள் கிட்டியது. அத்தோடு இன, மத பேதங்கள் அற்ற தலைவரான ரணிலை ஆசியாவின் உச்சியில் அமர்த்த வேண்டியது எமது கடமையாகும்.

முழு நாடாளுமன்றமும் அரச செயற்பாடுளில் ஈடுபடும் வகையிலான முறையொன்றினை உருவாக்க அவர் முயற்சிக்கிறார். டீ. எஸ் சேனாநாயக்கவும் இந்நாட்டவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டுதான் சுதந்திரத்தைப் பெற்றார். அந்தவகையில் தற்போதைய ஜனாதிபதியின் வீட்டுக்குத் தீயிட்டாலும் அவர் முடங்கிப் போய்விடவில்லை. அதனால் 2048 என்ற இலக்கை நோக்கி முன்னேறுவோம். – என்றார். (02)

# மைத்திரிக்கு எதிரான சர்வதேச சதித் திட்டமே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம்!

## தயாசிறி சாடல்



நல்லாட்சியின் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளக விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளுக்கும் , அழுத்தங்களுக்கும் இடமளிக்கவில்லை.

எனவே தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவரை பதவி நீக்குவதற்காக முன்னெடுக்கப்பட்ட சர்வதேச சதித்திட்டமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களாகும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சு.க.வின் மே தினக் கூட்டம் கண்டியில் இடம்பெற்ற போது ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

இனிவரும் எந்தவொரு தேர்தலிலும் சு.க. தனித்தே போட்டியிடும். அதற்குரிய பலத்துடன் கட்சியை மீளக் கட்டியெழுப்புவோம்.

கடந்த 2018 இல் தேசிய சொத்துக்களை விற்பதற்கு இடமளிக்க முடியாது என மேதினக் கூட்டங்களை நடத்தியவர்கள் இன்று தேசிய சொத்துக்களை விற்பதற்கான யோசனைக்கு ஆதரவாக கைகளை உயர்த்தியுள்ளனர்.

ஆனால் சு.க. ஒருபோதும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்காது. இதே கொள்கையையே நல்லாட்சியின் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பின்பற்றினார்.

அதற்கமைய அவர் உள்ளக விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளுக்கும் , அழுத்தங்களுக்கும் இடமளிக்கவில்லை.

இதன் காரணமாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத சில சர்வதே சக்திகள் அவரை வீட்டுக்கு அனுப்புவதற்கான சதித்திட்டங்களை தீட்டின. இவ்வாறு இடம்பெற்ற சதியே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களாகும். ஆனால் இன்று இதனை திசை திருப்பி அவரை சிறையிலடைக்கச் சிலர் முயற்சிக்கின்றனர்.

எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குகளின் பின்னணியிலுள்ள பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

## பேச்சை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளித்து நேரடியாகக் கூற வேண்டும். இனிமேலும் இதைத் தள்ளிப் போட முடியாது என எடுத்துக் கூற வேண்டும். சர்வதேச சமூகமும் அதற்குச் சாதகமாக நடந்துகொள்ளும் என நான் அறிகின்றேன்.

தற்போது நிலைமையைப் பாருங்கள். இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு, பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம் என்றெல்லாம் கூறுவதற்கு முன், வடக்கு, கிழக்கில் காணி பறிபோகின்றது. தொல்பொருள் திணைக்களம், தொல்லை திணைக்களம் ஆகி விட்டது.

சிவனைத் தூக்கிக் கடாசி விட்டு, ஆமதுருக்கள், இராணுவத் துணையுடன், புத்தனை பிரதிஷ்டை செய்கின்றார்கள். காவி உடையில் அரசியல் செய்யும் ஆமதுருக்களை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

அதற்கு இதுதான் வேளை. இல்லாவிட்டால் கடும் பதற்ற நிலைமை வடக்கு – கிழக்கில் விரைவில் உருவாகும்.

மலைநாட்டில், வந்தவன், போனவன் எல்லாம் அடாத்தாகத் தோட்டக் காணிகளைப் பிடிக்கிறான்.

ஆனால், 200 வருட வரலாற்றைத் தொட்டு விட்ட பெருந்தோட்ட மக்களுக்கு வாழ, பயிர் செய்ய காணி இல்லை.

மலையகத் தமிழருக்காக நான் குரல் கொடுத்தால், என்னைத் தேயிலைக் கொழுந்து பறிக்க வந்தவன் என்கின்றார்கள். தோட்டக் காட்டான் என்கின்றார்கள்.

இது மலைநாட்டுத் பெருந்தோட்ட பகுதிகளில் கடும் பதட்ட நிலைமையை மெதுவாக உருவாக்கி வருகின்றது. – என்றார். (02)

## 3 மாவட்டங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையான மழை எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மழை காரணமாக பதுளை, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட முதற்கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலிலுள்ளது.

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல மற்றும் பசறை பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரிவுகள், கேகாலை மாவட்டத்தின் கேகாலை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகள், மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல மற்றும் பஸ்கொட பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரிவுகளுக்கே இவ்வாறு முதற்கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது. (02)

## பொலிஸாரை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றுமொரு பொலிஸ் குழுவினர், சந்தேகநபர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் திருகோணமலை கடற்படை முகாமில் பணிபுரியும் 25 வயதுடைய சிப்பாய் எனவும், மற்றைய சந்தேகநபர் சீதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனவும் பொலிஸ் தெரிவித்தனர். (02)

## முகக் கவசம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் கொரோனாவால் பாதிக்ப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக மக்களை மிகவும் கவனமாக இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

முகக்கவசம் அணிவது ஒரு கட்டாய சட்டம் அல்ல, ஆனால் அதுவொரு கோரிக்கை என்றும் அவர் கூறியுள்ளார்.

சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனைவரும் பின்பற்றுவது மிகவும் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (02)

## ஹைஏஸ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரிடம் பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் தாம் பணம் கொடுத்தமைக்கான ஆதரத்தை உருவாக்குவதற் காகவே அவரைக் கடத்தி வந்து தாக்கியுள்ளனர்.

சுமணன் முச்சக்கர வண்டிச் சாரதியாக இருக்கிறார். நேற்றுக் காலை முச்சக்கர வண்டி வாடகைக்கு வேண்டும் என்று கூறி இளம்பெண் அவருக்கு அழைப்பெடுத்துள்ளார். அவர் வரச்சொன்ன இடத்திற்கு சுமணன் சென்றுள்ளார். அங்கு காத்திருந்த 10 பேர் கெகாண்ட கும்பல் சுமணனை மடக்கி,

அவரது முச்சக்கர வண்டியை அங்கேயே கைவிட்டுவிட்டு ஹைஏஸ் வானின் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வந்துள்ளது.

கொக்குவில் தாவடி எரி பொருள் நிரப்பு நிலையத் துக்கு முன்பாக உள்ள வீடு ஒன்றில் அவரை அடைத்து வைத்து மிரட்டி ரூபா 10 லட்சம் தர வேண்டும் என்ற கடிதம் ஒன்றை எழுதி வாங்கியுள் ளது அந்தக் கும்பல்.

வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் கடத்தப்பட்டு சித்திர வதை செய்யப்படுகிறார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் யஞரின் கட்டளைக்கு இணங்க விசாரணைகள் தொடங்கப்பட் டன. கடத்தப்பட்டவர் மறைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டிருந்து புறப்பட்ட கடத்தல் கும்பல் மன்னார் செல்ல முற்பட்டதாகக் கிடைத்த தகவலை அடுத்து வானுடன் சேர்த்துக் கும்பலை மடக்க பொலிஸார் ஏற்பாடு செய்த னர். அதன்படி யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் கடமையில் நின்ற போக்குவ ரத்து பொலிஸாரின் உதவியு டன் வான் மடக்கப் பட்டது.

தாங்கள் உறவினர் வீட்டுக்கு வந்தனர் எனவும் எவரையும் கடத்திவரவில்லை என்றும் வானில் இருந்த வர்கள் விசாரணையில் தெரி வித்துள்ளனர். எனினும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவி னர் வாகனத்துடன் அவர்க ளைக் கொண்டு சென்று கொக்குவில் தாவடி பகுதியில் உள்ள வீட்டைச் சுற்றிவளைத்துச் சோதனையிட்டனர்.

வவுனியாவில் இருந்து கடத்திவரப்பட்டவர் அந்த வீட்டில் அடிகாயங்களுடன் காணப்பட்டார். பொலிஸார் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். கைது செய்யப்பட்டவர்களில் மூவர் பெண்கள். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சந்தேக நபர்கள் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட இருந்தனர்.

# வாக்கு கேட்டுவரும் கட்சியின் இலக்கை தெரிந்து மக்கள் வாக்களிக்க வேண்டும்

## ருவன் விஜேவர்த்தன கோரிக்கை



நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்த கட்சி ஆதரவாளர்கள் மீண்டும் ஒன்றுபடவேண்டும். மனு நாணயக்கார, ஹரின் பெர்ணான்டோ எம்முடன் இணைந்துகொண்டதுபோல் இன்னும் பலர் எம்முடன் இணைந்து கொள்ள இருக்கின்றனர்.

அவர்களையும் இணைத்துக்கொண்டு கட்சியை பலப்படுத்திக்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்ய அனைவரும் ஒன்றுபட முன்வரவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மேதின கூட்டம் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் ஆசிர்வாதத்துடன் பிரதித் தலைவர் றுவன் விஜேவர்த்தன தலைமையில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு தேவையான சலுகைகளை எப்போதும் ஐக்கிய தேசிய கட்சியே வழங்கி வந்தது.

தொழிலாளர்களைப் போராட்டத்துக்கும் பேரணிக்கும் மாத்திரம் ஐக்கிய தேசிய கட்சி பயன்படுத்தியதில்லை.

தொழிலாளர்களுக்கு தேவையான சலுகைகள் மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்து அவர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய முடியுமான சூழலை ஏற்படுத்துவதன் மூலமே நாட்டை அபிவிருத்தியடையச்செய்ய முடியும்.

அத்துடன் கடந்த காலங்களில் இளைஞர்கள் வீதிக்கிறங்கி போராட்டம் செய்து–வந்தார்கள். அவர்களின் கோரிக்கையாக இருந்தது. மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதாகும்.

மாற்றத்தை ஏற்படுததுவதாக இருந்தால் அரசியல் கட்சிகளுக்கு நாட்டை கட்டியெழுப்ப நீண்டகால திட்டங்கள் இருக்க வேண்டும். ஆனால் நாட்டை ஆட்சி செய்ய வரும் கட்சிகள் தேர்தல் காலங்களில் மக்களுக்கு சில நிவாரணங்களை வழங்கி, அவர்களின் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வருகின்றன.

ஆனால் குறுகிய காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச்செய்கின்றன. மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் எனத் தெரிவிப்பவர்கள் வரி கொள்கையை அறிமுகப்படுத்தும்போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். சலுகைகளை மாத்திரமே அவர்கள் எதிர்பார்க்கிறனர்.

அதனால் மக்கள் தேர்தல் காலத்தில் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்கு கேட்டு வரும் கட்சிக்கு, நாட்டை கட்டியெழுப்ப இருக்கும் வேலைத்திட்டம் என்ன, அதற்கான இலக்கு என்ன என்பன தொடர்பில் தெரிந்துகொண்டு வாக்களிக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி எப்போது ஆட்சிக்கு வரும்போது, நாடடை அபிவிருத்தி செய்யும் நீண்டகால வேலைத்திட்டத்தை தயார்ப்படுத்தியே தேர்தலுக்கு முகம்கொடுத்துவருகிறது.

அதேபோன்றே தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நீண்டகால வேலைத்திட்டத்தைத் தயாரித்து, 2048 ஆம் ஆண்டாகும்போது அபிவிருத்துயடைந்த நாடாக இலங்கையை மாற்றும் இலக்கை நோக்கி பயணத்தை ஆரம்பித்திருக்கிறார்.

அத்துடன்வங்குரோத்து அடைந்தநாட்டையேரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றார். வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை மீளகட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தபோது, அதனை பெறமுடியாது என எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

ஆனால் 3மாதங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொண்டோம். பாராளுமன்றத்தில் நாணய நிதியத்தின் தீர்மானத்துக்கு ஆதரவளிக்குமாறு தெரிவித்தபோது அதற்கு வாக்களிக்காமல் பின்கதவால் சென்றனர். இவ்வாறு செயற்பட்டு நாட்டை கட்டியெழுப்ப முடியாது.

அதனால் நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல கட்சி பேதங்களை மறந்து நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்த கட்சி ஆதரவாளர்கள் மீண்டும் ஒன்றுபடவேண்டும்.

கட்சியில் இருந்து பிரிந்து சென்றிருந்த மனு நாணயக்கார, ஹரின் பெர்ணான்டோ ஆகியோர் மீண்டும் எம்முடன் இணைந்து கொண்டதுபோல் இன்னும் பலர் எதிர்காலத்தில் எம்முடன் இணைந்துகொள்ள இருக்கின்றனர். அவர்களையும் இணைத்துக்கொண்டு கட்சியை பலப்படுத்திக்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்ய அனைவரும் ஒன்றுபட முன்வரவேண்டும். – என்றார்.

# நமது நாட்டின் தொழிலாளர்களை தொழில் முயற்சியாளர்களாக்குவோம்

## ஹரீன் பெர்னாண்டோ உத்தரவாதம்



சவால்களை ஏற்க முன்வராதவர்கள் இன்று பேரணியாகச் செல்வதில் பயனில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அதனை புரிந்துகொள்ள நீண்ட காலம் தேவைப்படும்.

நாம் அதனை புரிந்துகொண்டதாலேயே இவ்விடத்தில் இருக்கிறோம். சவாலை வெற்றிகொண்டு நாட்டை பொறுப்பேற்குமாறு எனது முன்னாள் தலைவருக்கு தெரிவித்தேன்.

என்றாலும் அவர் முன்வரவில்லை. அதனால்தான் நானும் மனுவும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்து நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொண்டிருக் கிறோம் என காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹறீன் பெர்னாண்டோ தெரிவித்தார்

ஐக்கிய தேசிய கட்சியின் மேதின கூட்டம் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் ஆசிர்வாதத்துடன் பிரதித் தலைவர் றுவன் விஜேவர்த்தன தலைமையில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

எவர் ஒருவருக்கும் சரியான இலக்கு ஒன்று இல்லாதபோது அவர்களது பயணத்தை தொடர்வது கடினமாகும்.

ஜனாதிபதியின் உரை ஓர் இலக்கையும் நோக்கையும் கொண்டதாகக் காணப்படுகிறது. அதுதான் அரசியலில் நிகழவேண்டிய மாற்றமாகும்.

25 வருட வேலைத்திட்டத்தை தயாரித்து பயணிக்க ஆரம்பித்திருக்கிறார். ஆனால் ரணில் விக்ரமசிங்க 6 தடவை பிரதமராக இருந்து செய்ய முடியாமல்போன அபிவிருத்தியை இப்போது எவ்வாறு செய்யப் போகிறார் என சிலர் எம்மிடம் கேட்கின்றனர்.

அவ்வாறு இல்லை. 6 தடவைகள் பிரதமராக இருந்த ரணில் இன்று ஜனாதிபதியாகி தனக்கான மைதானத்தை கட்டமைத்து விளையாடிக்கொண்டிருக்கிறார்.

மேலும் அன்று சவால்களை ஏற்க முன்வராதவர்கள் இன்று பேரணியாகச் செல்வதில் பயனில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அதனை புரிந்துகொள்ள நீண்ட காலம் தேவைப்படும்.

நாம் அதனை புரிந்துகொண்டதாலேயே இவ்விடத்தில் இருக்கிறோம். சவாலை வெற்றிகாணெ;டு நாட்டை பொறுப்பேற்குமாறு எனது முன்னாள் தலைவருக்கு தெரிவித்தேன்.

என்றாலும் அவர் முன்வரவில்லை. அதனால்தான் நானும் மனுவும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்து நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

தந்தை திறமையானவர் என்பதற்காக மகன் திறமையானவராக இருப்பார் என எதிர்பார்க்கமுடியாது. அந்தகட்சியில் இருக்கும் ஒருசிலர் அங்கு இருந்தாலும் அவர்களின் உள்ளம் இங்குதான் இருக் கிறது.

அடுத்த வருடத்தில் சுற்றுலாத் துறையை அதிக வருமானம் ஈட்டும் துறைகளில் முதலிடத்திற்கு கொண்டு வர வேண்டும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அந்த சவாலை நான் ஏற்றுக்கொள்வேன் . இன்று வரையில் காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சால் 2.5 பில்லியன் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதிகள் மட்டுமே நமக்குப் போதுமானதல்ல.

எதிர்கால சந்ததிக்காக நல்லதொரு நாட்டை உருவாக்க வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். அதற்காக அவர் 2048 ஆம் ஆண்டு ஆகும்போது நாட்டை வெற்றிகொள்வார்.

இவற்றை நமக்காகவே செய்கிறார். இதற்கு ஒரு வருடத்துக்கு முன்னதாக காணப்பட்ட நிலைமையை தலைகீழாக மாற்றியவரும் அவரேயாவார்.

எதிர்க் கட்சிகளுக்கு ஆர்ப்பாட்டங்களை செய்வது மாத்திரமே நோக்கமாக இருந்தாலும் 2048 அடுத்த சந்ததிக்கான அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்குவதே எமது நோக்கமாகும். ஐக்கிய தேசியக் கட்சியை ஒருவராலும் வீழ்த்த முடியாது. அதனால் அடுத்த 5 வருடங் களுக்குள் இந்நாட்டவர் அனைவருக்கும் தங்களுக்கு உரித்தான காணி இருக்கும் என்பதை நான் உறுதியளிக்கிறேன். அதற்காக நமது நாட்டின் தொழிலாளர் களை தொழில் முயற்சியாளர்கள் ஆக்க வேண்டியது அவசியமாகும். நாம் இறந்துவிட்டாலும் நமது பிள்ளைகள் வாழ்வர் என்பதால் 2048 ஆம் ஆண்டு இலக்கை வெற்றிகொள்ள ஒன்றுபட்டு செயற்படுவோம். – என்றார்.

# நவீன பயங்கரவாதிகளே அச்சமடைந்துள்ளார்கள்

## திலும் அமுனுகம இப்படிக் கருத்து



நவீன பயங்கரவாதிகளே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட–மூலத்தைக்கண்டு அச்சமடைந்துள்ளார்கள். திருத்தங்களின்றி பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிறந்த தீர்மானங்களால் குறுகிய காலத்துக்குள் நாடு வழமைக்கு திரும்பியுள்ளது.

அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் கொள்கைக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தற்போதைய நெருக்கடியான நிலையில் அரசியல் காரணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாது என்பதற்காக ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.

காலி முகத்திடல் போராட்டத்தின் ஊடாக மக்கள் முன்வைத்த பல கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளோம். ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது.

ஜனநாயகம் என்று குறிப்பிட்டுக் கொண்டு கடந்த ஆண்டு நாட்டில் இடம்பெற்ற செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. தொழில் உரிமை என்று குறிப்பிட்டுக்கொண்டு பேராசிரியர்கள் பரீட்சை விடைத்தாள் திருத்த பணிகளில் ஈடுபடுவதை புறக்கணித்துள்ளார்கள். இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நவீன பயங்கரவாதிகள் தான் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட–மூலத்துக்கு எதிராகப் போர்கொடி தூக்கியுள்ளார்கள். திருத்தங்களின்றி இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட வேண்டும். தொழிற்சங்கத்தினரது முறையற்ற செயற்பாடு ஒட்டுமொத்த மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. – என்றார்.

# ஆட்சிகள் மாறும்போது கொள்கைகள் மாறும்

## இது பலவீனம் என்கிறார் சாகல



அரசாங்கம் மாறும்போது கொள்கைகளை மாற்றுவது அன்றிலிருந்து இன்றுவரை இருக்கும் பலவீனம்.

2019 ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் எதிர்க்கட்சிக்கு சென்றபோது, முதன்மைக் கணக்கில் மேலதிகம் இருந்தது. ஆனால் ஆட்சி மாற்றத்திற்கு பிறகு கொள்கைகள் மாறின. இது நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தியது.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதியின் பிரதானி சாகல ரத்னாயக்க.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

நெருக்கடியான நேரத்தில், ரணில்; மீண்டும் நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். தலைகீழாக இருந்த வரிக் கொள்கையை மறுசீரமைத்தார். வரிக் கொள்கையை மாற்றினோம். மறைமுக வரிகள் அதிகரிக்கும் போது மக்கள் அனைவரும் அதை செலுத்துகிறார்கள். அதை மாற்றும் போது வலிக்கிறது. தயக்கத்துடன், நாங்கள் அதை செய்ய வேண்டியிருந்தது. எரிவாயு மற்றும் எண்ணெய் வரிசைகளை அகற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொருளாதாரத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந்நியச் செலாவணியைப் பாதுகாக்க இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பணவீக்கம் 70 சதவீதமாக இருந்த ஒரு நாட்டை ஜனாதிபதி பொறுப்பேற்றார். கடந்த மாத இறுதியில், பணவீக்கம் 50 சதவீதமாக கொண்டு வரப்பட்டது. இந்த ஆண்டு இறுதிக்குள், பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்கமாகக் குறைக்க முயற்சித்து வருகிறோம். பொருள்களின் விலையும் குறைகிறது. எண்ணெய் விலை மேலும் குறையும். இன்னும் சில நாள்களில் எரிவாயு விலை மேலும் குறையும். சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்கனவே செய்–துள்ள ஒப்பந்தங்கள் காரணமாக நாட்டு மக்களுக்கு இவ்வாறான பலன்கள் கிடைக்க ஆரம்பித்துள்ளன.– என்றார்.

# நாடு சவால்களை எதிர்கொள்ளும் போது அதிலிருந்து தப்பிக்கும் அரசியல் கட்சிகள்!

## பாலித ரங்கே பண்டார சாட்டை



சவால்கள் எதிர்கொள்ளும் போது அதிக மான அரசியல் கட்சிகள் அவற்றில் இருந்து தப்பித்துச் செல்வதுண்டு. ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் சவால்களை ஏற்றுக் கொண்டு சவால்களை வென்றெடுத்துள்ளது. சவால்களை ஏற்று சவால்களை வெல்வதற்கு வரலாற்றில் எமது தலைவர்களுக்கு எமது கட்சி தலைமைத்துவம் வழங்கியது.

– இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அன்று தற்போதைய தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை வழங்குவதற்கு இந்நாட்டு மக்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், தனக்கு ஜனாதிபதி பதவி தராததால் அவர் மக்களை வெறுக்கவில்லை. சகித்துக்கொண்டு நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். 2001 இல் நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் வீழ்ந்திருந்தது. ரணில் விக்ரமசிங்க பிரதமராக நாட்டை பொறுப்பேற்றார். பொருளாதார வளர்ச்சி மறை 1.5 இற்கு சரிந்திருந்த நிலையில் மூன்று மாதங்களில் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்து முன்னேற்றினார். 2015 இல் கூட பிரதமராக நாட்டை சரியாக நிர்வகித்து அபிவிருத்தி செய்தார். 2022 ஆம் ஆண்டு வங்குரோத்தடைந்த அரசை சரியான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் சவாலை ஜனாதிபதியாக ஏற்றுக்கொண்டுள்ளார். இந்த சவால்கள் அனைத்தையும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

2048 இல் நாட்டை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதே எமது இலக்காகும். இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்கள் திட்டம் வகுத்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு எந்தத் தலைவருக்கும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் தொலைநோக்குப் பார்வை இல்லை. இவ்வளவு தியாகம் செய்யும், தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர் வேறு யாரும் இலர். 2048 இற்குள் கண்டிப்பாக வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்கும் இலக்கை அடைவதற்கான திட்டத்தை நிறைவேற்ற அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இதுவொரு மோசமான நடவடிக்கை!

இலங்கைக் காவல்துறையில் நடந்திருக்கக்கூடிய ஒரு சம்பவம் வியப்பையும் விசனத்தையும் ஒருசேர ஏற்படுத்தியுள்ளது. இசை நிகழ்ச்சி ஒன்றின் மேடையில் காவல்துறைச் சீருடையில் நடனமாடினார் எனக் கூறப்படும் காவலர் ஒருவரைப் பணி இடைநிறுத்தம் செய்து உத்தரவிட்டுள்ளது காவல் தலைமையகம். பேலியகொட காவல் நிலையத்தில் கடமையாற்றும் காவலர் ஒருவரே இவ்வாறு பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். சித்திரை 30 களனி – பியகமவிலுள்ள விளையாட்டரங்கில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் பாடல் ஒன்றைக் கேட்டு மகிழ்ச்சீயடைந்த அவர் தன் கடமைச் சீருடையுடன் மேடையில் ஏறி ஆடினார் என்பதுதான் அவர் செய்த பாரதூரமான குற்றச்சாட்டு.

அவர் சீருடையில் மேடையில் ஏறி ஆடியது காவல்துறையின் மதிப்பைக் குறைப்பதாக, மக்கள் மத்தியில் காவல்துறையை மதிப்பிழக்கச் செய்வதாக காவல் தலைமையகம் கருதியிருக்கக்கூடும். காவல் சீருடை மரியாதைக்குரியது, அதற்கு மக்கள் மதிப்பளிக்கவேண்டும் என்றால் அதை அணிந்துள்ளவர்கள் களியாட்டங்களிலும், முறைகேடான நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது என்ற காரணத்துக்காக அந்தக் காவலருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டிருக்கலாம்.

ஆச்சரியம் என்னவென்றால், இலங்கைக் காவல்துறைக்குள் நடக்கும் பல்வேறு விடயங்களுடனும் ஒப்பிடும்போது அந்தக் காவலர் செய்தது ஒன்றும் அத்தனை பெரிய மதிப்பிழப்பு நடவடிக்கையல்ல. சீருடைய அணிந்திருப்பதற்காக காவல்துறையினர் தங்கள் உணர்வுகள் அனைத்தையும் அப்படியே கட்டிப்போட்டு இருக்கவேண்டும் என்பதில்லை. அந்தக் காவலர் சில சமயங்களில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்த மேடையில் ஏறி நடனமாடிய சமயத்தில் நிறைவேற்ற வேண்டிய கடமையைத் தவறவிட்டிருந்தாரானால் அது தவறுதான். அப்படியல்லாத பொழுதில் அவர் சீருடையுடன் நடனமாடினார் என்பது ஒன்றும் மா பெரும் தவறு அல்ல. அப்படியிருந்தும் அந்தக் காவலர் உடனடியாகப் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

அதேநேரம் விசனத்துக்குரியது என்னவென்றால், இதைவிட மோசமான செயல்களையும் குற்றங்களையும் புரிகின்ற காவலர்கள் தண்டிக்கப்படுவதற்குப் பதிலாகப் பாதுகாக்கப்படுகின்றார்கள் என்பது தான். நடனமாடிய காவலரைவிட, தமது செயல்களால் நாளாந்தம் மக்கள் மத்தியில் காவல்துறையின் மதிப்பைக் குறைக்கும் வகையில் செயற்படும் எத்தனையோ காவலர்கள், அதிகாரிகள் இந்த நடனக் காவலரிலும் பார்க்க மோசமாக நடந்துகொள்கிறார்கள். ஆனால், அவர்கள் இப்படி உடனடியாகத் தண்டிக்கப்படுவதில்லை.

வீதிகளில் நாளாந்தம் கூசாமல் லஞ்சம் வாங்குகிறார்கள் காவலர்கள். பல சமயங்களில் மிரட்டிக்கூடக் காசு பிடுங்குகிறார்கள். காவல் நிலையங்களுக்கு வரும் பெண்களின் தொலைபேசி எண்களை முறைப்பாட்டுப் பதிவில் இருந்து எடுத்து அவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் காவலர்கள் பற்றிய முறைப்பாடுகள் ஏராளமுண்டு. பெண்கள் பலர் இதனால் முறையிடுவதற்காகக்கூட காவல் நிலையங்களுக்குச் செல்ல அஞ்சும் நிலை இருக்கின்றது. அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, பல வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் நாவாந்துறையில், கிறீஸ் மனிதன் எனப்பட்ட அநாமதேய நபர்களின் மிரட்டல் சம்பவம் தொடர்பாக ஏற்பட்ட குழப்பத்தில் அந்தக் கிராமத்திற்குள் நுழைந்து அங்கிருந்த அனைவரையும் அடித்துக் காயப்படுத்தி மனித உரிமை மீறலில் ஈடுபட்ட காவல்துறை அதிகாரிக்கு, கிளர்ச்சியை அடக்கியவர் என்று காவல் தலைமையகம் விருது கொடுத்ததே தவிர, நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு வந்தபோதுகூட அவர் மீது விசாரணை நடத்தப்படவில்லை. போர்க் காலங்களில் காவல்துறையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்களுக்கு அளவுகணக்கு இல்லை. அவை தொடர்பில் ஒரு விசாரணைகூட நடத்தப்பட்டதில்லை. போதாதற்கு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படையினர் தொடர்பாக விசாரணை நடத்தியிருக்க வேண்டிய காவல்துறையினர் அதைச் செய்ததில்லை. தமது கடமை தவறியிருக்கின்றனர். அவர்களுக்கு எதிராக எல்லாம் ஒரு நடவடிக்கையும் பாய்ந்ததில்லை.

போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் காவலர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இருக்கும் தொடர்பு உலகமகா இரகசியம். அதுபோலவே கடமை நேரத்தில் மது அருந்தும் காலவர்களும், கடமைக்காக மதுவை லஞ்சமாகக் கேட்கும் காவலர்களும் எல்லாக் காவல் நிலையங்களிலும் மலிந்து கிடக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எதிராகவெல்லாம் எந்த நடவடிகக்கையும் பாய்ந்ததில்லை. இவை பற்றியெல்லாம் பொதுமகன் ஒருவன் காவல் அணைக்குழுவிற்கு முறையிட்டால் குற்றஞ் செய்தவரை விட்டுவிட்டு குற்றச்சாட்டை முன்வைத்தவரை படாதபடுத்தி அவரை உண்டு இல்லை என்றாக்கி தமது சகாக்களையும் சக காவலர்களையும் காப்பாற்றப் போராடும் அதிகாரிகளைக் கொண்ட காவல்துறையில் ஒரு காவலர் சீருடையில் நடனமாடித் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் என்பதற்காக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதே அல்ல. அவ்வளவு பெரிய தண்டனை வழங்கப்படுமளவிற்கு அவர் எந்தப் பெரிய குற்றமும் செய்யவில்லை. இன்னும் சொல்லப்போனால், சீருடையில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினால் தான் தண்டனைக்குள்ளாவோம் என்பதைக்கூட அறியாத அப்பாவியாகவே அவர் இருந்திருக்க வாய்ப்புகளுண்டு என்னும்போது அவருக்கு இந்தத் தண்டனை மிக மிக அதிகம்.

உண்மையில் நடனமாடியதையும் தாண்டி அவர் ஏதாவது குற்றங்களை இழைத்திருந்தால் அதற்காக அவர் தண்டிக்கப்படுவதைக் கேள்விக்குட்படுத்தவில்லை நாம். சீருடையீல் நடனமாடியதற்காக ஒரு காவலர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டது அதிகம் என்பதுதான் எமது வாதம். அவருக்கு சிறு தண்டனைகள் ஏதாவது வழங்கப்படலாம். பதிலாக, ஊழலிலும், குற்றங்களிலும், முறைகேடுகளிலும் ஈடுபடும் காவலர்களுக்கு எதிராக இதுபோன்ற இறுக்கமான நடவடிக்கைகளை காவல்துறைத் தலைமையகம் உடனடியாக எடுக்கவேண்டும் என்பதே கோரிக்கை.

## பொதுமக்களை ஒன்றுதிரட்டிப் போராடுவோம் மனித உரிமை அமைப்புகள் அரசுக்கு சவால்!

நாட்டுமக்களால் நிராகரிக்கப்பட்ட ஆட்சியாளர்கள், தமது தனிப்பட்ட அரசியல் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக மக்களின் அடிப்படை உரிமைகளை சமரசம் செய்வதற்கு இடமளிக்கக்கூடாது.

அதன்படி பேரழிவை ஏற்படுத்தக் கூடிய, ஜனநாயகவிரோத உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் எத்தகைய திருத்தங்களையும் மேற்கொள்ளவேண்டிய அவசியமில்லை. மாறாக அச்சட்டமூலத்தை முழுமையாக வாபஸ்பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

இல்லாவிடின் அதற்கு எதிராக அனைத்து சக்திகளையும் ஒன்றுதிரட்டி மாபெரும் மக்கள் போராட்டத்தை ஆரம்பிப்போம் என்று மனித உரிமைகள், சிவில் சமூக மற்றும் மாணவ செயற்பாட்டாளர்களும், தொழிற்சங்கவாதிகளும் கூட்டாக எச்சரித்துள்ளன.

அரசாங்கத்தால் முன்மொழி–யப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் பல்வேறு எதிர்க்கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், சகல தரப்பினரதும் யோசனைகளுக்கு அமைய அவசியமானதும், ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அறிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அந்தச் சட்டமூலத்தில் திருத்தங்கள் அவசியமில்லை எனவும், மாறாக அதனை முழுமையாக வாபஸ்பெறவேண்டும் எனவும் வலியுறுத்தி மனித உரிமைகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மாணவ செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகளென சுமார் 80 பேர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தமட்டில் 'பயங்கரவாத எதிர்ப்பு' என்ற பெயரில் இயற்றப்பட்ட சட்டங்கள் மக்களைக் காப்பதற்காகவன்றி, மக்களை அடக்கு–வதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி 1979 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கத்தால் இயற்றப்பட்ட பயங்கரவாதத்தடைச்சட்டமும் ஜனநாயகத்துக்கு விரோதமான அடக்குமுறைச்சட்டமேயாகும். யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாகப் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

1988 களிலும், யுத்தகாலத்திலும், உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னரும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களின் விளைவாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற பொதுக்கருத்து வலுப்பெற்றது.

இருப்பினும் இதுவரையில் எந்தவொரு அரசாங்கமும் அந்தச் சட்டத்தை நீக்குவதற்கோ அல்லது அச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, விசாரணைகளின்றி நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் கோட்டாபயராஜபக்சஅரசாங்கத்தின்மிகமோசமான ஆட்சிக்கு எதிராகவும், ஊழல் நிறைந்த சமூக, பொருளாதாரக்கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதை முன்னிறுத்தியும் உருவான அமைதிப்போராட்டத்தை நசுக்குவதற்கு ரணில் மீ ராஜபக்ச அரசாங்கத்தால் இந்த அடக்குமுறைச்சட்டம் பயன்படுத்தப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே, அனைத்துப் பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கல்வௌ சிறிதம்ம தேரர் மற்றும் களனி பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர் ஹான் ஜீவந்த ஆகியோர் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டதுடன், மேலும் நூற்றுக்கணக்கான மாணவ செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுக்கு அழைத்துவரப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்கவேண்டும் என்ற விடயம் பொதுமக்களின் மிகமுக்கிய கோரிக்கையாக மாறியுள்ளது.

இருப்பினும் ரணில்–ராஜபக்சஅரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு–வதாகக்கூறி, அதனைவிடவும் ஆபத்தான பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தயாராகிவருகின்றது. 'அடக்குமுறையின் கைகளில் ஆணிகளுக்குப் பதிலாக இரும்புக்கூர்முனையைப் பொருத்தும்' பாணியிலானதொரு தீர்வே இதுவாகும்.

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி 'அரசாங்கத்தின் எந்தவொரு எதிர்ப்பாளரும்' பயங்கரவாதியாக முத்திரை குத்தப்படுவார். நாகரிக முன்னேற்றமடைந்த எந்தவொரு நாட்டிலும் கருத்துத் தெரிவிப்பதும், எதிர்ப்பு வெளியிடுவதும் அந்நாட்டுமக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருக்கையில் இந்நாட்டில் மக்களின் அடிப்படை உரிமையை இல்லாதொழிக்கும் நோக்கிலேயே பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் கொண்டுவரப்படுகின்றது.

சமூகவலைத்தளங்களில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள், ஊடக செய்திகள், அனைத்து வகையான போராட்டங்கள் மற்றும் பேரணிகளைத் தடைசெய்யும்வகையில் கொண்டுவரப்படும் இந்தப்பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை ஏற்றுக்கொள்வதென்பது நாட்டுமக்களின் ஜனநாயகத்தை ஒட்டுமொத்தமாகக் குழிதோண்டிப்புதைக்கும் செயலாகும்.

நாட்டுமக்களால் நிராகரிக்கப்பட்ட ஆட்சியாளர்கள், தமது தனிப்பட்ட அரசியல் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக மக்களின் அடிப்படை உரிமைகளைசமரசம்செய்துகொள்வதற்கு இடமளிக்கக்கூடாது. எனவே, பேரழிவை ஏற்படுத்தக்கூடிய உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது.

அதன்படிஜனநாயகவிரோதபயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தைமுற்றாகவாபஸ்பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் அதேவேளை, இல்லாவிடின் அனைத்து சக்திகளையும் ஒன்றுதிரட்டி மாபெரும் மக்கள் போராட்டத்தை ஆரம்பிப்போம் என்றும் எச்சரிக்கின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாடு வீழ்ச்சியடைந்த போது ரணிலைத் தவிர வேறு எவரும் சவாலை ஏற்க முன்வரவில்லை

### அகிலவிராஜ் பெருமிதம்



ஜே.ஆர். ஜயவர்த்தன 70 வயதுக்கு பின்னர் இரண்டு முறை நாட்டில் ஜனாதிபதியாக பாரிய அபிவிருத்திகளை முன்னெடுத்ததுபோல் ரணில் விக்ரமசிங்கவும் தற்போது 70வயதைதாண்டிய பின்னரே ஜனாதிபதியாகி இருக்கிறார்.

எனவே2948இல்நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கான வேலைத் திட்டத்தை முடித்து விட்டே நின்றுவிடுவார் என ஐக்கிய தேசிய கட்சி உப தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மேதின கூட்டம் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் ஆசிர்வாதத்துடன் பிரதித் தலைவர் றுவன் விஜேவர்த்தன தலைமையில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கடந்த வருடம் ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் இக்கட்டான நேரத்தில் மே தினத்தை கொண்டாடியது.1956 தேர்தலில் தோல்வியடைந்த போது ஐக்கிய தேசிய கட்சியின் சவப்பெட்டியில் ஆணி அடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

1970 இல் ஐக்கிய தேசிய கட்சி புதைக்கப்பட்டதாக கூறப்பட்டது. 1988 இல் ஜே.வி.பியினர் ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்க முயன்றனர்.

1993 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் எமது முன்னாள் தலைவர்களை வெடிகுண்டுகளால் அழிக்க முயன்றனர்.

2020 இல் கட்சியை இரண்டாகப் பிரித்து ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்க முயன்றனர்.

ஆனால் இன்று ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் கட்சியாக மாறியுள்ளது.

ஆனால் இறுதியில், எங்கள் கட்சியின் தலைவர், நாட்டின் ஜனாதிபதியாகியுள்ளார். இந்த நாடு வீழ்ச்சியடைந்த போது ரணில்விக்ரமசிங்கவைத்தவிர வேறு யாரும் அந்த சவாலை ஏற்க முன்வரவில்லை.

இன்றுஅவர்இந்தநாட்டை படிப்படியாக முன்னோக்கி கொண்டு செல்கிறார். பல அவதூறு பிரசாரங்களுக்கு மத்தியில் அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டார்.

அவர் யாரையும் பழிவாங்கவில்லை. இந்நாட்டில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கி, 2048 இல் வளர்ந்த நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துக்கு அவர் தோள் கொடுத்துள்ளார்.

ஜே.ஆர். ஜயவர்த்தன 70 வயதுக்கு பின்னர் இரண்டு முறை நாட்டில் ஜனாதிபதி பாரிய அபிவிருத்திகளை முன்னெடுத்ததுபோல் ரணில் விக்ரமசிங்கவும் தற்போது 70வயதை தாண்டிய பின்னரே ஜனாதிபதியாகி இருக்கிறார்.

எனவே2948இல்நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கான வேலைத் திட்டத்தை முடித்துவிட்டே நின்றுவிடுவார் என்றார்.

## வெளிநாட்டுச் சக்திகள் கண்டு அஞ்சிய ஒரே தலைவர் எமது ரணில் விக்ரமசிங்க

### ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர புகழாரம்

ஐக்கிய தேசிய கட்சி வீழ்ச்சி கண்டிருந்த போதும் கட்சியுடன் இணைந்திருந்தோரே இங்கு அதிகளவில் கூடியிருக்கின்றனர்.1994க்குப் பிறகு ஏறக்குறைய முப்பது வருடங்களாக உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் ஒருவரை கண்டு அஞ்சின. அது தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே. அவரை வீழ்த்த எல்லா வழிகளிலும் முயன்றனர்.

– இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்நாட்டைக் கட்டியெழுப்ப முயன்ற எமது கட்சின் தலைவர்கள் பலரும் எதிர்பாராத விதத்தில் மரணம் அடைந்தனர். பிரேமதாஸ, லலித் அத்துலத்முதலி,



காமினிதிஸாநாயக்கபோன்ற தலைவர்கள் வீதிகளில் கொல்லப்பட்டனர். ஆனாலும் ரணில் விக்ரமசிங்க என்ற ஒரு தலைவர் மிஞ்சி இருந்தமையாலேயே இன்று கொழும்பை சுற்றி இடம்பெறும் மேதினக் கூட்டங்களுக்கு வருவதற்கு மக்களுக்கு எரிபொருள் கிட்டியது. அத்தோடு இன மத பேதங்கள் அற்ற தலைவரான ரணிலை ஆசியாவின் உச்சியில் அமர்த்த வேண்டியது எமது கடமையாகும்.

முழு நாடாளுமன்றமும் அரச செயற்பாடுளில் ஈடுபடும் வகையிலான முறையொன்றை உருவாக்க அவர் முயற்சிக்கிறார். டீ.எஸ். சேனாநாயக்கவும் இந்நாட்டவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டுதான் சுதந்திரத் தைப் பெற்றார். அந்த வகையில் தற்போதைய ஜனாதிபதியின் வீட்டுக்குத் தீயிட்டாலும் அவர் முடங்கிப் போய்விடவில்லை. அதனால் 2048 என்ற இலக்கை நோக்கி முன்னேறுவோம். – என்றார்.